KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ டிசம்பர் ௴ 5௨ [No. 48.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 941
2. அப்பர். (நாடக வியல்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 943
3. நம்மாழ்வார் விபவம் (திருவாய்மொழி) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 946
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கக் கலம்பகம்) 948
5. வில்லிபாரதம் (சூதுபோர்ச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை, B.A., B. L. 951
6 எண்சாணுடம்பிற்கு எவ்வளவு நிலம் வேண்டும் (Tolstoy) V. K. ராமநாதன் B.A, B.L. 954
7. கம்பராமாயணம் (கடிமணப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. 956
8. மலர்வனம் (காதன் மாதவி) "மதுகரம்" 959
9 வர்த்தமானம் 960

## கலாநிலயம்

### கல்சரை அடையும் வகை

### VII

இரண்டிலொன்று முதலி லுறுதியா யுரைக்காம லுழல்வதா லேதுபயன்! மனமொன் றெண்ண வாயொன்று சொல்லிக் கையொன்று செய்து குழம்புவதின்றியே தெருளவேண்டிய யாவற்றிற்கும் முதன்மையாய் நிற்பது, பண்டை நாட்களி லிந்நாட்டினர் வாழ்க்கை, இக்காலத்தைக் காட்டிலும் எல்லாப் படியாலும் பண்பும் பயனும் பெற்றுயர்ந்திருந்ததோ மற்றெவ்வகையிலேனுந் தாழ்ந்திருந்ததோ என்னுங்கேள்விக்குரிய விடையேயாம். "வெள்ளைக் கேள்வி இதனிலும் வேறில்லை; இதற்கு விடையும் விளம்பவேண்டுமோ! நம் பண்டைப் பெருமை உலகறிந்த தொன்றாயிற்றே" என்று எம்பலொடு இயம்பி, "செல்வக் களஞ்சியம், இன்பக் கடல், கல்வி மலை, கற்பின் வைப்பு, சுதந்திரச் சுவர்க்கம், இந்நாடு" என வாய்க்குவா யிட்ட பிச்சையாய்க் கட்டுரைத்துத் தொடர்வதெல்லாம் பெரும்பான்மை, இழிகுணமுடையோர் வளர்க்கும் வம்பிற்கும் வாதத்திற்கும் உதவுகின்றனவேயன்றி, உண்மையை உணர்ந்து அதன்படி ஒழுகும்பொருட்டு உரைக்கப்பெறும் மாற்றங்களாவது அருமை. ஏனெனில், இப்பெருமையை இயம்பிய வாய் மூடும் முன்னரே, அதனிற்குக் காரணமாயிருந்த முறைகள் யாவற்றையும் கைகடக்க விட்டுவிட்டு நேரெதிரான முறைகளை மேற்கொள்ளுமாறு அதே மூச்சில் மொழிகின்றனரே! மாங்கனி மிகவும் இனிமையானது......ஆகையால் இருக்கின்ற மாமரங்களை யெல்லாம் வெட்டி யெறிந்துவிட்டு, நெருஞ்சியு மெருக்கும் விதைத்திடுங்கள்" என்றுரைக்கும் பேரறிவினும் வேறன்று அன்னார் அறையும் நெறி. இந்த விபரீதம் எல்லாத்துறைகளிலும் கலங்கிக்கிடக்கின்றதேனும் கல்வியின்திறத்தில் வெளிப்படையாய் எளிதிற் காணும்படி இந்நாள் நிகழலாகின்றது. "முற்காலத்தில் ஆண் பெண் அடங்கலும் அளவிறந்த கல்வியை உடையவராயிருந்தனர்: அஃதன்றே அந்நாள் நலமனைத்திற்கும் காரணம்" என்றியம்புவரேனும், "எந்தக் கல்வியை எம்முறையிற் கற்றனர்" என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டும் என்ற எண்ணமே எழுகின்றதில்லை. அக்காலம், யாவரும் காவிய நாடக அலங்காரங்கள் கற்றனர்; தர்க்க வியாகரண மீமாம்ஸங்கள் பயின்றனர்; புராண இதிகாஸங்கள் ஓதினார்; தர்மசாஸ்திரங்கள். வேதசாஸ்திரங்கள் ஆய்ந்தனர்; தத்துவ சாஸ்திரங்களால் தேர்ச்சியுற்றனர். இவைகளையும் இவைகளின் சார்புநின்று உதவுகின்றவைகளையும் கல்வியென்று கருதிக் கடைபிடித்தனர் அக்காலத்தவர். பண்டைக்காலப் பெருமையைக் காட்டிக்காட்டி அப்பெருமைக்கு முதற்காரணமாயிருந்தது 'கல்வி' என்பதையும் சொல்லிக்கொண்டே, இக்காலத்திலும் கல்வி வேண்டுமென்று அரசாங்கத்தையும் பொதுஸ்தாபனங்களையும் தனவந்தர்களையும் கூவிக்கூவிக் கூக்குரலிட்டு, "ஆரம்பக் கல்வி கட்டாயக்கல்வி, ஆண்கல்வி, பெண்கல்வி" என்னும் பலசாதிக்கல்விகளுக்கு ஆரவாரம்செய்வோர் எவரும் அந்நாட் பெருமைக்கு ஆதாரமாயிருந்த கல்வியைக் கற்கவேண்டுமென்றேனும் கற்பிக்கவேண்டுமென்றேனும் முயல்கின்றனரென உரைப்பதற்கில்லை

யே. அதுவுமன்றி, இவைகளைக் கற்பிப்பது வீணென்றும், இதனால் நமது பிள்ளைகள் சக்தி செத்தவர்களாகி விடுவாரென்றும், முதலிலேயே மறுத்து, "உபயோகமானவைகளை எளிய முறையில், 'முன்னேற்ற' மடைந்துள்ள மற்ற நாடுகளைப்போல் நாமும் கற்பிக்க" வேண்டுமென்றும் கழறுவார் கூற்றை என்னென்று எண்ணுவது! நாமிங்கு இதுகாறும் வகுத்துக்காட்டிய இலக்கணத்திற் கிணங்கும் கல்சர் வளர்வதற்குரிய சாதனங்களையே முன்னோர் கல்வியென்று கருதினாராக, இக்காலத்தவர் வாய்த்தொழிலையும் கைத்தொழிலையும் கல்வியென்ற போரலழைத்து வேழமுண்ட விளங்கனியை விற்றுவருகின்றனரே. கல்சர் வளர்ந்து, தெய்வசிந்தனை தருமசிந்தனை பகுத்தறிவு முதலிய நன்மைகள் தழைத்ததால் அக்கால வாழ்க்கை அன்பும் அருளுமுடைய நீரும் நிழலும்பெற்றுத் திகழ்ந்தது. சான்றோர் பலர் இருந்தனர்; யாண்டும் இடும்பை இல. அன்பைக் களைந்து அறத்தை வேர்கல்லி 'நான் நான்' எனத் தருக்கித்திரியும் வகையே கற்பிக்கும் பாடங்களால், தொழில்களால் தனதாய வர்த்தகமுறைகளால், நமது கலாசாலைகள் செய்துவருகின்ற கருமத்தைக் கண்கூடாகப் பார்த்து இருக்கின்றோமே. தெய்வசிந்தனை யெல்லாம், பணமெனும் பேயின் நினைவாகமுடிகின்றது; தருமசிந்தனை யெல்லாம், எப்படியாவது 'முன்னுக்கு' வரவேண்டுமென்ற கொள்கையாக மாறுகின்றது; பகுத்தறிவெல்லாம் பத்திரிகைகள் புகுத்து மறிவே.

கற்பிக்கின்ற விஷயங்கள்தான் இவ்வாறு வேறுபட்டன வென்னின், அவைகளைத்தான் கற்பிக்கின்ற முறைகளும் முன்னின்று முற்றிலும் முரணுற்றிருக்கின்றன. 'மந்தைமந்தையாகப் பிள்ளைகளைக் கொண்டுபோய் அவர் வாழ்நாளில் பாதிநேரம் பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்குள் அடைத்துவைத்துக், கேட்டவன் கேட்டவன் கற்றவன்கற்றவன் விட்டவன் விட்டவன் என்ற முறை பண்டைநாளிற் கண்டறியோம். தந்தையே தன் மக்களுக்குக் கல்வியை ஆரம்பித்துத் தருவான். தன்னால் கற்பிக்க இயன்றவளவு கற்பித்த பிறகு தன் பிள்ளையைத் தக்க ஆசிரியனிடத்தில் சேர்க்கின்றான். அவ்வாசிரியனோ வாய்க்கூலி வாத்தியாரல்லன். முழுதுங்கற்றவன். நற்குலத்தவன். ஒழுக்கமுடையவன். குணத்தின் மேன்மையன். பணத்தாசை பற்றாதவன். தன் மாணவன் நற்குண நற்செய்கைகளோடு தெய்வபக்தியுடையவனாகவேண்டுமென்ற ஆர்வம் மிகுந்தவன் இத்தகையதோர் உத்தமனோடு மாணவன் நெருங்கிப் பழகுகின்றான். அவனோடு உறங்கி அவனோடு உலவி பிறரொடு மவன் உரையாடும் நன்மொழிகளைக்கேட்டு வளர்கின்றான் மாணவன். தானளிக்குங் கல்விக்கு வருவாய் எதிர்பார்ப்பதில்லை ஆசிரியன்; தான் கற்குங் கல்வியால் வருவாய் மாணவனும் எதிர்பார்ப்பதில்லை. அவனது பெற்றோர்க்கும் அந்நோக்கமிலது. எனின், தன்னை மறக்காத உண்மையனுப் தன் உற்றார் பெற்றார் பெருநாட்டார் தெய்வம் இவர்களுக்குமுன் ஆளாகி நிற்கும் தூய்மையனாய் முதிர்கின்றான் அம்மாணவன். பண்டைநாள் சித்திரமிது; இதன் பக்கத்தில் இக்கால மாணவனையும் அவனது அருமை உபாத்தியாயரையும் படம்பிடித்து இயக்கவைத்துப் பார்ப்பார் நெஞ்சம் பதைக்குமே. இனிப் படிக்கின்ற புத்தகங்களிலும் இவ்வித விபரீதம் நிகழக் காணலாம். தெய்வமாக்கவிகளும் முனிவர்களும் தம் மெய்தவமூ நாவால் நவின்ற நூல்களல்லால் அக்காலம் ஒன்றுமோதார். இன்றைக்கு நம் பள்ளிக்கூடங்களில்,சிறுவர்க்கென்று அமைக்கின்ற பாடபுஸ்தகங்களிற் பெரும்பான்மை எத்தன்மையன என்பதைச் சிறிதறிவுடையோரும் உணர்ந்துகொள்வர். இங்குரைத்தன அவ்வளவும் ஆரம்பப் பாடசாலைமுதல் சர்வகலாசாலை யீறாக யாவற்றிற்கும் பொருந்துமென் றுரைத்தல்மிகை.

ஆதலின், வர்த்தமானப்பத்திரிகைகளைப் போலவே தற்காலக் கலாசாலைகளும் கல்சருக்கு விரோதமாகவே நடைபெறுகின்றன வென்பதை நன் குணர்ந்து, எல்லா நலங்களுக்கும் ஏற்ற சாதனமாய கல்சரை அடையும் வகை, அப் பத்திரிகைகளை மொய்ப்பதிலும் பள்ளிக்கூடத்தில் கும்பல்சேர்வதிலு மில்லையெனத் தெருட்டவேண்டியது எமது கடமையாயிற்று. எதிர்மறையாக இவ்வளவு விளங்கியதிலிருந்து மற்றக் கல்சரை அடையும் நெறி யாதென்று ஒருவாறு தெளிந்திருக்கும். வாழ்க்கையை விற்றே வயிறுபிழைக்க வழிகூறுவோர் வாய் ஓயுமெனின் அதுவேஇன்று முதலில் இவ்வுலகம் எய்தவேண்டிய பாக்கியம். கல்சரிலேயே கவனத்தைச் செலுத்த இக்கால் வர்த்தகமுறைகளும் உத்தியோகவகைகளும் அரசியல்நெறிகளும் தனதாய விதிகளும் பெரிதும் இடையூறா யிருக்கின்றன என்பது உண்மையே. என்றைக்கு நமது நிலங்களைக் கைவிட்டு இவைகளில் நசையுற்றோமோ அன்றைக்கே கல்சரின் கழுத்தில் கைவைத்தாய்விட்டது. எனினும் இருக்கின்ற நிலைமையை ஏற்றுக்கொண்டாலும் முற்றிலும் கையற்று நிற்கவேண்டியதில்லை. கல்சரில் நம்பிக்கையும், அதனை அடைய வேண்டுமெனும் ஊக்கமும் உண்மையாய் உடையோம் எனின் இவ்விடையூறுகளையும் பெரும்பாகம்கடந்துவிடலாம். நன்னெறி நடக்க விரும்புவோர்க்குக் கடவுளே அருகிருந்து கைதந் துதவும். தாளாண்மை யுடையோர்க் கெதிர் நிற்கவல்ல இடையூறு முண்டோ.

இங்நிலையிலேயே இருந்துகொண்டும், அவரவர் தாமும் கல்சரையெய்தி மற்றவர்களுக்கும் எய்துவிக்கும் வழி யாதென்று நாம் நினைப்பதைப் பிற்றை நாள் கூறுவதுடன் இவ்வரிசைத் தலையங்கங்களை முடிவிற்குக் கொண்டுவர லாவோம்.

அடுத்த வருடத்திய சந்தாவிற்காக ஜனவரி முதலில் வி. பி. அனுப்புவோம். மற்று, நண்பர்கள் இம்மாதத்திற்குள்ளேயே தங்கள் 1930 வருடத்திய சந்தாவை மணியார்டரில் அனுப்புவாராயின் அவர்களுக்கு வி. பி. செலவு குறைவதுடன், எங்களுக்கும் மிகவும் சவுகரியமா யிருக்கும். "மானேஜர்"



3- JAN

# அப்பர்

## 7. அப்பரும் நாடக வியலும்

[ 925 வது பக்கத் தொடர்ச்சி ]

### V. கூத்தின் சில பாத்திரங்கள் . அவற்றின் தொழில்கள்.

### (iv) வரி

இனி, வரியென்பது யாதென்றும் அது எந்தச் சந்தர்ப்பங்களிற் றேவாரப் பாசுரங்களிற் காணப்படுகின்ற தென்பதும் ஆராய்வோம் :—

வரியென்பதற்குக் கோலச்சாரி என்னும் பொருள் உண்டு. அதாவது தனக்குரிய கோலத்தை விட்டு வேற்றுருக்கொண்டு* ஆடுவது. (உதாரணம்)சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி யென்பது சாலினிகொற்றவை யுருக்கொண் டாடியது. ஊர்சூழ் வரி யென்பது:— எல்லோருங் காண வெளிப்பட்ட வுருவினொடு கண்ணகி ஊர் சூழ வந்தது, ஊர்சூழ் வரியாம். அயலார் கண்ணிலகப்படாது வாழ்ந்த கண்ணகி, பலருங் காணும் கோலமாய் வந்த கோலச்சாரி யாதலால் இதுவும் வரியின்பாற்படும். சிவபெருமான் வேடுவவுருக் கொண்டு பார்த்தனைப் பரிசோதித்துப் பாசுபதம் அருளியதும் ஒருவகை வரியே.

வாய்த்தது நந்தமக் கீதோ பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர் !
கோத்தன் றமுப்புரந் தீவளைத்தான் றில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட்பட் டிருப்பதன்றோ நந்தம்கூழமையே?

பூத்தன பொற்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணங்[கள்
தேத்தெனவென் றிசை வண்டுகள்பாடுசிற்றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல் லாருளரோ வென்றன் கோல்
[வளைக்கே !

கோயில் திருவிருத்தம்-5-6

தக்கனது வேள்வியை அழிக்க வீரபத்திரமூர்த்தியாய்ச் சென்றதும் ஒருவகை வரியே.

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னுன்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட்கொண்
[டதே?

ஷை-10.

சுந்தரமூர்த்திநாயனார் திருவெஞ்சமாக்கூடல் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து திருக்கூடலை யாற்றூரின் சமீபத்தில் வந்தும் அங்குச் செல்லாது திருமுதுக்குன்றை நோக்கிச் செல்ல, சிவபெருமான் ஒரு விப்பிர வடிவங்கொண்டு 'திருமுதுக்குன்றம் வழி எது' என்று கேட்ட சுந்தரருக்கு இது கூடலையாற்றூருக்குப் போகும் வழி, என்று மொழிந்து மறைந்த அதிசயத்தைச் சுந்தரர் தேவாரத்தில் பாடிய பதிகமும் * வரியிலக்கணம் பெற்று விளங்கும்:—

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடல் யாற்றூரில்
அத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே !
வேலையி னஞ்சுண்டு விடையது தானேறிப்
பாலன மென்மொழியாள் பாவையொ டும்முடனே
கோலம துருவாகிக் கூடலை யாற்றூரில்
ஆலனிவ் வழிபோந்த வதிசய மறியேனே!

இவ்வாறே திருநாவுக்கரசரும்,

ஒள்ளி யாரிவ ரன்றிமற் றில்லையென்
றுள்கி யுள்கி யுகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யாரிவர் போலத்தி ருவாய்மூர்க்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே!

தனக்கே றமை தவிர்கென்று வேண்டினும்
நினைத்தேன் பொய்க்கருள் செய்திடு நின்மலன்
எனக்கே † வந்தெதிர் வாய்மூருக் கேயெனப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ?

திருவாய்மூர் - திருக்குறுந்தொகை 5-9.

என்றும் அத்தலத்தில் பாடிய திருத்தாண்டகத்தில் காணப்படுகின்றன.

மண்ணைத் திகழ நடம தாடும்
வரைசிலம் பார்க்கின்ற பாதங் கண்டேன்
விண்ணிற் றிகழு முடியுங் கண்டேன்
வேடம் பலவாஞ் சரிதை கண்டேன்
நண்ணிப் பிரியா மழுவுங் கண்டே
னாலுமறை யங்க மோதக் கண்டேன்
வண்ணப் பொலிந்திலங்கு கோலங் கண்டேன்
வாய்மூ ரடிகளையான் கண்ட வாறே !
கான்மறையும் போதகத்தி னுரிவை கண்டேன்
காலிற் கழல்கண்டேன் கரியின் தோல்கொண்
டேன்மறையப் போர்த்த வடிவுங் கண்டேன்
உள்க மனம்வைத்த வுணர்வுங் கண்டேன்
நான்மறை யானோடு நெடிய மாலு
நண்ணி வரக்கண்டேன் திண்ண மாக
மான்மறி தன்கையில் மருவக் கண்டேன்
வாய்மூ ரடிகளையான் கண்ட வாறே!

திருவாய்மூர் - திருத்தாண்டகம் 3 & 5.

சிவபெருமான் பொதுவியலில் நடமாடல் என்பதற்கு ஒருவகைச் சான்று அவர் நடிக்கும் காலமே

* விட்டிசைப்பன கொக்கரை கொடுகொட்டி தத்தளகம்
கொட்டிப்பாடுமித் துந்துமி யொடு குடமுழா நீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ் முருகன்பூண்டி மாநகர்வாய்
இட்டபிச்சை கொட்டுண்பதாகினீ ரெத்துக்கிங் கிருந்தீ
[ரெம் பிரானிரே?
சுந்தரர்.

* கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை யதிசய மிதுவென்று
நாடிய வின்றமிழா னுவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே.

† தஞ்சே கண்டேன் தரிக்கிலாது "ஆர்?" என்றேன்
"அஞ்சேல்! உன்னை யழைக்க வந்தேன்" என்றார்
உஞ்சே னென்றுகந் தேயெழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரோ வாய்மூ ரடிகளே!

திருவாய்மூர்-திருக்குறுந்தொகை 3.

யாம். கூத்தர்கள் ஊரூராய்ச் சென்று பொதுஜனங்களுக்குஆடும் தெருக்கூத்து, இரவில் ஊண்உண்டு சில நாழிகை கழிந்தபின்னர் ஆரம்பித்து வைகறைமட்டும் ஆடும் வழக்கம் இன்றும் நமது கிராமங்களிற் காணலாம். அதுபோலவே சிவபெருமான் ஈமக் காட்டிலாடுவது இராப்பொழுதென்றே தேவாரம் கூறும்.

" சுற்றும் பேய்சுழ லச்சுடு காட்டெரி
பற்றி யாடுவர் பாய்புலித் தோலினர்
மற்றை யூர்களெல் லாம்பலி தேர்ந்துபோய்
ஒற்றி யூர்புக் குறையு மொருவரே "

திருவொற்றியூர்-திருக்குறுந்தொகை 4.

என்று திருநாவுக்கரசுநாயனர் திருப்பாசுரத்தில் காலம், பலி ஏற்பதற்கு எது, எரியாடுவதற்கு எது, என்று விரித்துக்காட்டாவிடினும் மற்றொரு தலத்தில் இதை விளக்கியது காண்க :—

பல்லி லோடுகை யேந்திப் பகலெலாம்
எல்லி நின்றிடு பெய்பலி யேற்பவர்
சொல்லிப் போய்ப்புகு மூரறி யேன்சொலீர்
பல்கு நீற்றினர் பாசூ ரடிகளே!

திருப்பாசூர்-திருக்குறுந்தொகை.

இரவிலேயே வரிக்கூத்தும் பெரும்பாலும் ஆடப்படும். பொதுவியற்கூத்து எந்நிலத்திலும் பகற்பொழுதில் நடத்துவது சாதாரணமன்று. ஏனெனில் பகற்பொழுதில் ஒவ்வொரு நிலமாந்தரும் தத்தம் பிழைப்பின்நிமித்தம் வெளியிற் செல்வர். இரவிலே வீடுசேர்ந்து போசனமுடித்த பின்னர்க் கூத்தாட்டம் பார்ப்பர். இது உலகவியல்பாதலால் பொதுவியலிலக்கணத்திற்குத் தக்கவாறு இறைவன் திருக்கூத்தும் * அமைந்தது போலும்.

### (v) பாணியும் அதன் பாத்திரங்களும்

இனி, பாணி என்பது யாது என ஆராய்வோம். தேவாரத்தில் பன்முறை "பாரிடம் பாணி பாடப் பயின்றவெம் பரமமூர்த்தி!" எனச் சிவபெருமான் துதிக்கப்பட்டதால், பாணி பாடுவது கூத்தனுக்குத் துணைவர் பாடுவதென்பது வெளிப்படை.

பாணியென்னும் பதத்திற்குப் பாட்டு என்று பொருள். இது முத்தமிழ்க்கும் பொதுவாயது. இது இயற்றமிழில் வருங்கால் கொச்சகத்திற் காணலாகும். இங்கு வரும்வழியும், பெருந்தேவபாணி, சிறுதேவபாணி என இருவகையாய் வரும். பெருந்தேவபாணி கொச்சக வொருபோகில், கழிநெடிற்சீர்களால் நல்ல பண்ணும் தாளமும் பொருந்த வரும். அத்தகைய பாணி திருவதிகைவீரட்டானம்-பண்-காந்தார மென்னும் பதிகம்-சமணரேவிய யானையை இதனால் அப்பர் வெருட்டினர். அவற்றின் முதற்செய்யுளும் திருக்கடைக்காப்புச் செய்யுளும் பின் வருமாறு:—

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு
மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
யஞ்ச வருவது மில்லை (1)

நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்க ளெல்லாங்கொண் டெடுத்தா
னென்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதென்று மில்லை
யஞ்ச வருவது மில்லை (10)

சிறுதேவபாணிக்கு அடியார்க்குநல்லார் உரையில் கொடுக்கும் மேற்கோள்:—

வண்ணமலர்ச் சரங்கோத்து
மதனவேண் மிகவெய்யக்
கண்ணாளவோர் புலனல்லாக்
கனல்விழியா லெரித்தனையா
லெண்ணிறந்த தேவர்களு
மிருடிகளு மெழுந்தோட
வொண்ணுதலாள் பாகங்கொண்
டொருதனியே யிருந்தனையே!

இதற்கு மிகவும் பொருத்தமான தேவார உதாரணம் சுந்தரமூர்த்திநாயனர் * திருக்கோடிக்குழகர் (குழகர் கோயில்) என்னும் தலத்திற் பாடிய பதிகமாகும். அப்பர் பாடிய திருமறைக்காடு திருக்குறுந்தொகையில் † சில பாசுரங்கள் வந்துழிக் காண்க.

தேவபாணி யென்பது தேவர் பராவுதல் என்னும் பொருளாம். "ஏனையொன்றே, தேவர் பராவுதல் முன்னிலக்கண்ணே" ‡ என்பர் தொல்காப்பியனர். "கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித் தேறிய விரண்டு தேவ பாணியும்" என்பதற்குப் பேராசிரியர் "தரவினை நிலையென வடக்கி முகத்திற்படும் தரவினை முகநிலையெனவும், இடைநிற்பனவற்றை இடைநிலை யெனவும், இறுதியி னிற்பனவற்றை முரிநிலை யெனவும் பரவுதற் பொருண்மையாற் பெயர் கொடுத்தார் செய்யுளியலில்" என்பர்.

* பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டும் நெய்தல்சூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகர்
தீயெரிகை மகிழ்ந்தாடும் திருவேட்டக் குடியாரே.

சம்பந்தர்.

காடு கொண்டரங் காக்கங்குல் வாய்க்கணம்
பாட மாநட மாடும் பரமனர்
வாட மாளிறங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதின் சூழ்வன்னி யூரரே.

அப்பர்-திருவன்னியூர்-திருக்குறுந்தொகை 1.

* சுந்தரர் - திருவாரூர் - பண் - பழம்பஞ்சரமும் இதன் பாற்படும் - "வண்ண மலர்" என்னும் செய்யுளையும், கீழ் வரும் சுந்தரர் செய்யுளையும் ஒத்திட்டு நோக்குக:—

ஐவணமாம் பகழியுடை யடன்மதனன் பொடியாகச்
செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி
மையணவுங் கண்டத்து வளர்சடையெம் மாரமுதை
எவ்வணநான் பிரிந்திருக்கே னென்னூ ரிறைவனையே.

† சங்கு வந்தலைக் குந்தடங் கானல்வாய்
வங்க மார்வலங் கொண்மறைக் காடரோ!
கங்கை செஞ்சடை வைப்பது மன்றியே
அங்கை யில்லன லேந்த லழகிதே!

‡ தொல்காப்பியம். செய்யுளியல் சூத்திரம்.198



மேற்கண்டதேவபாணி இசைத்தமிழில் வருமாறு:- இசைப்பா, இசையளவுபா என்னும் இருபகுதிகளில், பாணி இசைப்பாவின்பாற் படும். அதன் பகுதிகள் பத்து. அவையாவன, செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டலமென்பர் * இசைநுணுக்கமுடைய சிகண்டியார். பஞ்ச மரபுடைய அறிவனர்; † சுத்தம் சாளகம், தமிழ் என்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பதுவகை யென்றும், அவை சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என்பன வென்பர். இவற்றின் இலக்கண வரையறுப்புகள் இனித் தமிழறிஞர் ஆராய்க.

நாடகத் தமிழில் தேவபாணி வருங்கால், பெருந்தேவபாணி பல தேவர்களையும், ‡ சிறுதேவபாணி வருணபூதரையும், மூவடி முக்கால் வெண்பாவாய்த் துதிக்கும்போது, அவரணியும் மாலை, ஆடை, அவர் நிறம், கொடி இவைகளையும் துதித்து அவராற் பெறவேண்டுவனவும் துதிக்கப்படும் திருநாவுக்கரசுநாயனர் சிறுதெய்வம் வணங்காராதலால் பெருந்தேவபாணி, சிறுதேவபாணி நடையில் சிவபெருமானை ஒரு நங்கை பாடுவதுபோல் (அகப்பொருள் முறையை யடுத்து) பாடுவதைக் காண்க:—

(திருவொற்றியூர்-திருத்தாண்டகம்)

வண்டோங்கு செங்கமலங் கழுநீர் மல்கு
மதமத்தஞ் செஞ்சடைமேன் மதியஞ் சூடித்
திண்டோள்க ளாயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோ கனர்
உண்டார்நஞ் சுலகுக்கோ ருறுதி வேண்டி
யொற்றியூர் மேய வொளிவண் ணனர்
கண்டேனன் கனவகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியுஞ் சுடர்த்தொழிலுங் கைவிட் டவே!
ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளே றேறி
யணிகங்கை செஞ்சடைமே லார்க்கச் சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையா ராணு மாவர்
பசுவேறி யுழிதருமெம் பரம யோகி
காமத்தா லங்கனையான் றன்னை வீழக்
கனலா வெரிவிழித்த கண்மூன் றினர்
ஓமத்தா ணன்மறைக ளோத லோவா
வொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே! (2)
வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்பு முடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்து வைத்தீர்
கண்டார்க்குப் பொய்யாது கண்டீ ரெல்லே
கொள்ளத்தா னிசைபாடிப் பலியுங் கொள்ளீர்
கோளரவுங் குளிர்மதியுங் கோடியுங் காட்டி
உள்ளத்தே நீர்கொண்டீ ரோத லோவா
வொளிதிகழு மொற்றியூ ருடைய கோவே! (3
நரையார்ந்த விடையேறி நீறு பூசி
நாகங்கச் சரைக்கார்த்தோர் தலைகை யேந்தி
உரையாவந் தில்புகுந்து பலிதான் வேண்ட
வெம்மடிக ளும்மூர்தா னேதோ வென்ன
விரையாதே கேட்டியேல் வேற்க ணல்லாய்
விடுங்கலங்க ணெடுங்கடலு ணின்று தோன்று
திரைமோதக் கரையேறிச் சங்க மூரும்
திருவொற்றி யூரென்றார் தீய வாறே! (4
மத்தமா களியானை யுரிவை போர்த்து
வானகத்தார் தானகத்தா ராகி நின்று
பித்தர்தாம் போலங்கோர் பெருமை பேசிப்
பேதையரை யச்சுறுத்திப் பெயரக் கண்டு
பத்தர்கடாம் பலருடனே கூடிப் பாடிப்
"பயின்றிருக்கு மூரேதோ? பணியீ!" ரென்ன
ஒத்தமைந்த வுத்தரநா ளீர்த்த மாக
வொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே! (5
கடியவிடை யேறிக் காள கண்டர்
கலையோடு மழுவாளோர் கையி லேந்தி
இடியபலி கொள்ளார் போவா ரல்ல
ரெல்லாந்தா னிவ்வடிகள் யாரென் பாரே
வடிவுடைய மங்கையுந் தாமு மெல்லாம்
வருவாரை யெதிர்கொண்டே மயிலாப் புள்ளே
செடிபடுவெண் டலையொன் றேந்தி வந்து
திருவொற்றி யூர்புக்கார் தீய வாறே! (6
வல்லவராய் வானவர்க ளெல்லாங் கூடி
வணங்குவார் வாழ்த்துவார் வந்து நிற்பார்
எல்லேயெம் பெருமானைக் காணு மென்ன
வெவ்வாற்று லெவ்வகையாற் காண மாட்டார்
நல்லார்க ளன்மறையோர் கூடி நேடி
நாமிருக்கு மூர்பணியீ ரடிகே ளென்ன
ஒல்லைத்தான் றிரையேறி யோத மீளு
மொளிதிகழு மொற்றியூ ரென்கின் றாரே! (7)
நிலைப்பாடே நான்கண்ட தேதீ கேளாய்
நெருநலைநற் பகலிங்கோ ரடிகள் வந்து
கலைப்பாடுங் கண்மலருங் கலக்க நோக்கிக்
கலந்துபலி யிடுவே னெங்குங் காணேன்
சலப்பாடே யினியொருநாட் காண்பே னாகிற்
றன்னாகத் தென்னாக மொடுங்கும் வண்ண
முலைப்பாடே படத்தழுவிப் போக லொட்டே
னொற்றியூ ருறைந்திங்கே திரிவா னையே! (8)
மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை
யிரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை
பிறிதல்லை யானுயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே! (9)
மருவுற்ற மலர்குழலி மடவா ளஞ்ச
மலைதுளங்கத் திசைநடுங்கச்செறுத்து நோக்கிச்
செருவுற்ற வாளரக்கன் வலிதான் மாளத்
திருவடியின் விரலொன்று லூற வூன்றி
உருவொற்றி யங்கிருவ ரோடிக் காண
வோங்கினவவ் வொள்ளழலா ரிங்கே வந்து
திருவொற்றி யூர்நம்மூ ரென்று போனர்
செறிவளைக ளொன்றொன்றாச்சென்றவாறே! 10

* செந்துறை வெண்டுறை தேவபா ணியிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே—கந்தருவத்
தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு. இசைநுணுக்கம்.

† செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாத—மெய்ப்படியுஞ்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைந்தொடியா யின்னிசையின் பா. பஞ்சமரபு.

‡ திருவள ரரங்கிற் சென்றினி தேறிப்
பரவுந் தேவரைப் பரவுங் காலை
மணிதிகழ் நெடுமுடி மாணிபத் திரனை
யணிதிகழ் பளிங்கி னொளியினை யென்றுங்
கருதா தடுத்த கடவுளை யென்றுங்
கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றும்
கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றுஞ்
சேவடி போற்றிச் சிலபல வாயினு
மூவடிமுக்கால் வெண்பாவின்மொழிப.

மதிவாணனர்.

# நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி (சில குறிப்புக்கள்)

927வது பக்கத் தொடர்ச்சி.

ஹிதேக்ஷியாயிருக்கிற வைத்தியன், கடுவும் திக்தமுமுள்ள மருந்துகளைச் சர்க்கரையில் பொழிந்து கொடுப்பதுபோல் இம்மஹானுபாவன், தான் உலகுக்கு உணர்த்த வேண்டிய தத்துவங்களையும் நீதிகளையும் ரசமாயுள்ள செய்யுளிலமைத்துத் தான் கற்பிக்கிறதாகக் காட்டிக்கொள்ளாமலே சொல்லிக் கற்பிக்கின்றார். இதற்குக் காரணம், முதல் திருவாய்மொழி முதல்பதிகத்தில் தமக்குப் பகவானிடத்தில் உண்டான அன்பும் பிரீதியும் உள்ளடங்காமல் ஏனைய உலகத்தாரும் தாம் பெற்றிருக்கிற நற்பேறுபெற்று உஜ்ஜீவிக்க வேணுமென்ற அருளே. இதைத்தான் மதுரகவியார் இம்மஹானுபாவனைக் கூறும்போது "உலகினில் அருள் மிக்கதே" என்று எடுத்து உரைத்தார். 1-ம் பத்து 2-வது பதிகம் உலக சங்கத்தை விட்டுவிட உபாயமும் அவனிடத்தில் ஈடுபாடு செய்யவேண்டிய நீதிகளையும் கற்பிக்கும். மூன்றும்பத்தில் அவன், "எளியவராகிலும் உலகளந்தாருக்கு ஓர் அமுதே" என்றும், சுலபமாய் அடையத் தகுந்தவனென்றும் அறுதியிடுகிறார். இனி 10-ம் பத்து 4, 5-பதிகம் வரையில், தம் அநுபவத்தையே பேசிவந்து, தாம் அநுஷ்டித்துக் காட்டலே உலகத்தார் திருந்த நல்ல உபாயமென்று, புத்திமதிகளைக் கூறு தலைவிட்டொழிந்து தம்மநுபவத்தையே பேசுகின்றார். ஷை 4, 5-பதிகங்களில் நெடுந்தூரம் யாத்திரை போகும் பிதா பிள்ளைகளுக்கு வண்டியில் ஏறிக்கொண்ட பிறகு இரண்டொரு முக்கியமான அம்சங்களைச் சுருக்கிக் கூறுவதுபோலப் பக்தியோக பிரகாரத்தையும் அதன் பிரயோஜனத்தையும் சொல்லித் தான் 1-ம் பத்தில் 3-பதிகங்களால் ஒருவாறு உபசிரமித்த பக்தியோகத்தின் கவடுகளைச் சொல்லி முடிக்கிறார். இதற்குப்பிறகும் தான் ஆத்மாநுபூதி விஷயங்களைச் சொல்லி உலகத்திற்கு ஒண் பொருள்களை மானிடர் மனதில் தோன்றும்படி அருள் பொருந்தி அளிக்கிறார். இதுவே திருவாய்மொழியின் பட்டாங்கு (plan of work). 4-ம் பத்து இறுதியில், இவ்வுலகத்தார், பொருளையும் ஐசுவரியத்தைம் குலம் புனைவு முதலான இதர சுவல்ப பயன்களையும் அடைய முயற்சிக்கிறாரே தவிர அவன் திறத்தில் படாமல் தம் சுவரூபத்தை அழித்துக்கொள்வதைக் கண்டு ஆற்றாமையாலும், தாமும் இவர்தம் கூட்டில் விழுந்து இழவுபடலாவதேன் என்கிற சங்கையாலும், தன்னடி சேர்ப்பிக்க இஷ்டமில்லையாகில் பிருகிருதி தேகத்திலிருந்தாவது "சாமறுக்கு" நீ இசைய வேண்டுமென்று பகவானைத் தாழ்ந்து பிரார்த்திக்கிறார். அவன் இதற்கும் இசையாமல், இவரைக்கொண்டே உலகத்தாருக்குத் திருவாய்மொழிப்பிரபந்தத்தை முடிப்பிக்க வேண்டுமென்ற சங்கல்பத்தால் வாளாவிருக்க, இவர் உலகத்தாரைத் திருத்தியாகிலும் அவர்களோடுகூட அவனை அநுபவிக்கலாமென்று திரும்பியும் "ஒன்றும் தேவு முலகமும்" என்கிற தசகத்தில் உபதேசம் ஆரம்பிக்கிறார். அடுத்த தசகத்தில் அவன் அடிக்கீழ் பொலிந்து புகுவாருக்கு, "கையார் சக்கரம்" என்கிற அற்புதமான மந்திர ரத்னத்தைக் கற்பிக்கிறார். இவற்றால் உலகம் சீர்பட்டதை இரண்டுபாசுரத்தால் சொல்லி உகப்பு அடைகிறார். பாசுரங்கள்,

"கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்
தொண்டீர் எல்லீரும் வாரீர்
தொழுது தொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்தான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின் றனவே"

'திரியும் கலியுகம் நீங்கித்
தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் (கிருதயுகம்) பற்றிப்
பேரின்ப வெள்ளம் பெருகக்
கரிய முகில்வண்ணன் எம்மான்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்து இசைபாடி
எங்கும் இடங்கொண் டனவே"

இப்பதிகத்தினிறுதியில் "மேவித் தொழும் அடியவரும் பகவரும், (பண்பாடுகிற பாகவதர்) "மிக்கது உலகே" என்றும் உகந்து, "கலியுகம் ஒன்று மின்றிக்கே" "அடியார்க்கு அருள் செய்யும் கண்ணன்" "உள்ளத்தில் மாசறுக்கு"மென்று நியமிக்கிறார். இவற்றைத் தவிர நீதிகளை உரைக்கும் சந்தர்ப்பங்கள் விசேஷமாய்க் குறிக்கத்தக்கன இப்பிரபந்தத்தில் இல்லை.

மற்றொரு குறிப்பு இவர் பிரபந்தத்தைப்பற்றிக் கூறஉளது. இவர் வால்மீகிரிஷியைப்போல் பதங்களை அளந்து உபயோகிப்பவர். சுருக்கிச்சொல்லல் மிகைபடக்கூறல் எனும் இரண்டு சொற்குற்றமும் இவர் பிரபந்தத்தில் காண்பதரிது. "சொல் இழுக்குபட்டு" பண் எதுகை மோனை இவற்றிற்கிணங்கி அநர்த்தங்களை விளைவிக்கும் இடர்ப்பாடும் நாயனார் கூறுவது போல் 'சோகாப்பும்(பின் நிகழும் மனவருத்தம் இவர் கிரந்தங்களில் ஓரிடத்தும் காணக்கிடையா. இதனால்தான் இவர் பிரபந்தத்திற்கு உரைகூறுவார், ஒவ்வொரு பதமும் அர்த்தவத் என்று அறிந்து பதப் பிரயோஜனம் எழுதுவார். சொல்லியதையே திரும்பச் சொல்லும் "புனருக்தி" தோஷமும் இவர் பிரபந்தங்களில் கிடையாது. எவ்விடத்திலாவது "புனருக்தி" தோஷம் வாய்க்கும்போல் தோன்றினால் உரைஅளிப்பவர், அக்குற்றம் சாராது என்பதற்கு ஏற்ற கோட்பாடுகளை எடுத்து இயம்புவர். இதுபோலவே மற்றொரு மாண்பு இவர் பிரபந்தத்துக்குள்ளதை எடுத்துக்கூற உளது. இவர் எடுத்துரைக்கும் புராண இதிஹாஸங்களிலுள்ள கதையும் சந்தர்ப்பமும் பிரகரணத்திற்குப் பொருத்தமுள்ளனவாகவே இருக்கும். ஒரு உதாரணமாக, தலைவனைப்பிரிந்த தலைவியின் ஆற்றாமையைக்கண்ட தாய் தலைவனை நோக்கி இரங்கிக் கூறும் பாசுரமாகப் பாடிய 2-ம் பத்து 4-ம் பதிகத்தை எடுத்துக் கூறுவோம்.

"ஆடியாடி அகம் கரைந்து இசை
பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி எங்கும்
நாடி நாடி நரசிங்கா! என்று
வாடி வாடும் இவ்வா ணுதலே."



"இவ் வொளிபொருந்திய நெற்றியையுடைய பெண் மனக்காதலால் தாக்கப்பட்டுத் தெய்வம் அவள்மேல் ஏறியதுபோல் ஆடிக்கொண்டு புகழ்பொருந்திய பல பாக்களைப்பாடிக் கண்களில் நீர் பெருக மனவாட்டத்துடன் எங்குற்றாய் நரசிங்கா? வென்று உன்னை எல்லா விடத்திலும் தேடும்" என்று இங்கே நரசிம்ம அவதார்த்தை எடுத்து, பிரஹலாதன் தன் தகப்பன் ஹிரணியன் தூணைப் புடைத்து "எங்கும் உளன் ஹரி என்கிறாய் மகனே; இதில் அவன் உளனோ" வென்று கேட்கப் பக்தனுக்கு இரங்கி அத்தூணினின்றும் அவதரித்ததுபோலத் தன்னை அளிக்க எங்கிருந்தாவது உத்பவிப்பான் என்ற கருத்தால் நாடுகின்றாளென்பது அர்த்தம். இப்பதிகத்தில் "என்போல வொரு பெண் உஷை என்பாளுக்கு அருள்செய்ய வாணாசுரனைச் செற்றீரென்றும், அது போலவே சீதையின்பொருட்டு இலங்கையை அழித்தீரென்றும் எடுத்துக்கூறிய பிரகரணங்களின் பொருத்தம் யாவரு மறியும்படி கிடக்கின்றது. இவர் பிரபந்தத்தில் எங்கேயுமுள்ள சந்தர்ப்பங்களை, ஆறாயிரம்படிஉரைகாரரைக்கொண்டு பொருத்தத்தை அறிந்துகொள்ளலாம்.

மற்றொருவிஷயம்: பின்னுளார், உள்ளுறைபொருள் சில (Esotric Meaning) ஒவ்வொரு புராணசந்தர்ப்பத்திலும் உண்டென்றும், அதைத் தாம் எடுத்து காட்டுவோமென்றும் இல்லாததைக் கற்பித்து அதைச் சாதிக்க வீண்முயற்சியில் முந்தி இடர்ப்பாடு படுவர். அவ்வாறின்றி நன்குவாய்ந்த விடத்தில் உள்ளுறை பொருளை இவர் கற்பித்தருள நாம் அறிகிறோம். உதாரணமாக

"மழுங்காத வைநுதிய சக்கரநல் வலத்தையாய
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்
மழுங்காத ஞானமே படையாக மலருலகில் [றினையே
தொழும்பா யார்க்களித்தால் உன்சுடர்சோதி மறை
[யாதே

கஜேந்திராழ்வான்காலை முதலை பிடிக்க "ஆதி மூலமே" என்று அது கதறவே அதன் இடர்தீர்க்க, திரௌபதிக்கு வஸ்திராபரணசமயத்தில் "அக்ஷயம்" என்று கிருஷ்ணபகவான் ருக்மணியோடுஆடிய சொக்கட்டான் காயைஉருட்ட அவ்வுத்தமிக்கு உடுப்பு அக்ஷயங்களாய்த் தீர்ந்ததுபோல், தன் ஞானசங்கல்பத்தால் ஒரு சுலபமான விரகுதேடித் தீர்க்க நினையாமல் திருமால், ராணுவச்சேவகன் தன் ஆயுதங்களைத் தீட்டித் தன் ரதம்ஊர்ந்து யுத்தத்துக்குப் புறப்படுவதுபோல் பல வாய்களிலும் நுண்மை "மழுங்காத" சக்கராயுதத்தைத் தரித்தவனாகக்கொண்டு கெருடபகவான் மீதேறி முதலையை ஸம்ஹரித்து யானையின்இடர்ப்பாட்டைத் தீர்த்தான். இப்படிக் கல்லாமல் ஓர் சிறிய விரகால் இடரைத் தவிர்த்திருந்தால் மூன்று உலகத்தாரும் அவனது ஆசிரதரக்ஷண குணத்தை மறந்துவிடுவார்கள். "சக்கராயுதம் தீப்தமாய் ஜ்வலிக்கக் கருடன் சிறகுகள் வேகத்தால் காற்றை நாற்புறமும் தூரத்தி ஆரவாரம் செய்ய உலகத்தாரெல்லோரும் கண்டு கேட்டு இது வல்லவோ காப்பு! நாம் இவ்வீசனை வழிபட்டுத் தொழுவோ மென்றுணர" நாம் நம்முடைய ஆச்ரித வாத்ஸல்யத்தைப் பிரகடனம் செய்ய சமயமென்று, சுடர் ஜோதியுள்ளான், அது மறையா வண்ணம் ஒரு சூழ்ச்சி கருதினானென்று உள் பொருளை ஆழ்வார் மேல்பாசுரத்தில் எடுத்துக் காட்டுகிறார். அடுத்த தசகத்தில் கிருஷ்ணவதாரகாலத்துத் தான் பிறந்திருந்தால் அவன் "மேவி யன்று ஆநிரை காத்த சுலபத்தை அநுபவித்திருக்கலாம். அதற்கு நாம் வாய்க்கவில்லை" என்றும், அதற்குமுன் திருவிக்கிரம அவதாரத்தில் மானிடனாப் பிறந்திருந்தால் "காண்மின்கள் உலகீர்! என்று கண்முகப்பே நிமிர்ந்த தாளினையனை" (மூன்றும் திருவாய்மொழி இறுதிப் பாசுரம்) கண்டிருக்கலாமென்றும் இரண்டு அவதாரப் பிரயோஜனங்களின் இரகசியத்தை வெளியிட்டுக் "கூவிக்கூவி", "வழிதிகைத்து அலமருகின்றேன்" இனி "அம்மானை எங்குத் தலைப்பெய்வே" னென்று இரங்குகிறார். இம்மஹானுபாவன் அமைக்கும் செய்யுள் பின்னர்த் திருவரங்கத் தமுதனார் செப்பியிருப்பதுபோல் "தென் குருகைபிரான் பாட்டென்னும் வேதப்பசும்தமிழ்" (அதாவது சுத்தத்தமிழ்) என்பதை நாம்சற்றுமுன் குறித்த 2-ம் பத்து 4ம்பதிகத்தைக் காட்டலாம். பின்னரும் இவர்தம் சமயத்துக்குள்ள சித்தாந்தங்களைக் கூறுமிடத்தும் சுத்தத் தமிழ் இவர் நூலுக்கு எங்ஙனம் உதவிக் கருவியாக அமைந்திருக்கிற தென்பதையும் காட்டுவோம். இவற்றைப் பயின்றார் நமது தமிழினருமைபெருமை நன்குணர்வார். அபேக்ஷிதமாயுள்ளவிடத்து யாமும் உரைகாரரின் உதவியையும் எடுத்துரைப்போம். மத விஷயங்களில் சமயாசிரியர்கள் தம் கட்டுரையில், பொருளின் நுண்மையை வரையறுத்துப் பேசுவார்களேயன்றி சாதுரியம் ஹாவஸியரசம் இவைகளைக் கலந்துரையார். இவர் சிற்சில சந்தர்ப்பங்களில் இவற்றின் துணைநலம் கொண்டு தன் நுண்பொருளைக்கூறவல்லார். உதாரணமாக, தாம் தலைமகளாய்ப் பகவானிடத்தில் மருள் கொண்டு உணங்குகையில் தாய்மார் கட்டுவிச்சியைக் கொண்டு குறிகேட்டு அவள் ஏவி அணங்காட, அவர்களைக் குறித்து "இவளுக்குற்ற நோய்க்கு மருந்து இதுவன்று; நீர் அணங்காடும் இளந்தெய்வமுமன்று" என்று தோழி விலக்கக்கூறிய பாசுரங்களில் ஒன்று ஹாவஸியமாகக் கூறுகிறார். இவள் பெருந்தெய்வத்துக்கு ஆட்பட்டவள். ஆகவே உங்கள் அணங்காட்டம் அவளுக்குக் கேடு விளைவிக்கும் என்ற கருத்தடக்கி "உணங்கல் கெட (புழுக்கின நெல்லைத் தின்ன) கழுதை உதடு ஆட்டம் கண்டு மகிழ்வீர்கள்" என்று தாய்மாரை பரிஹஸிக்கிறாள் மற்றொன்றில் புகழ்ச்சியாய்ச் செப்புவதுபோல் நிந்தாஸ்துதி செய்கிறார்.

"பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுயவிறக்கம் தலைப் பெய்வார்
அறவனை ஆழிப் படை அந்தணனை
மறவியை யின்றி மனத்து வைப்பாரே"

இதன் பொருள் - பலபிறப்புப் பிறந்து அதனால் அடையும் துயர்ப்பாட்டை ஒழிக்கவேண்டித் தம்இந்திரியங்களை ஜெயித்து அதினால் துறந்து தனக்கே உரித்தான ஆநந்தமயமான தன் ஆத்மஸ்வரூபத்தைப் பெறக் கடவார்கள். பக்தர் துன்பங்களைக் கடியும் அசூயாலேசமுமில்லாத் தூயமனத்தனை திருமாலைத் தம் தவத்துக்கு வரமளிக்க எப்போதும் சிந்திப்பார்கள் என்ன மஹாநுபாவர்களோ, என்கிறார். அவனை அடைய இத்துணைத்தபசேவேண்டும். இதுகொண்டே அவனை அணுக உபாயமிருக்க இப் பெரும்பேறுக்கு ஆசைப்படாமல் ஹீனமான கேவலம் ஆத்மதர்சனத்துக்கு முயலுகிறார்களே என்ன அஞ்ஞானரோவென்று நிந்திப்பது உள்கருத்து. இப்பொருள் கிடைக்க யோகம் வேண்டும்; தவம் வேண்டும்; அவனிடத்தில் பக்திவேண்டும். இத்தவத்தின் இறுதியில் மரணம் சம்பவிக்கும்போது அவனுக்குச் சமாநாகாரமாய்த் தன் ஆத்ம ஸ்வரூபம் உளதென்று அந்திம ஸ்மரணம் வேண்டும், என்று பகவத்கீதையின் கட்டளை இவ்வளவும் சொல்லத்துணிவார். இவ்வளவேமுயற்சிக்கு அவனைச் சுகமாய் அடையலாமென்று பல இடங்களிலும் இவர்கள்படும்இடர்ப்பாட்டை இகழ்ந்துஉரைக்கிறார்.

# தமிழ்ப் பாடம் 100.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 929-வது பக்கத் தொடர்ச்சி ]

## திருவரங்கக் கலம்பகம்.

*புலையாம் பிறவி பிறந்தென்செய் தோம்பொன்னி*
*[பொன்கொழிக்கு*
*மலையார் திருவரங் கத்தெம்பி ரானம தன்னையொடுந்*
*தொலையாத கானங் கடந்தவந் நாட்டடந் தோறும்*
*[புல்லாய்ச்*
*சிலையாய்க் கிடந்ில மேநெஞ்ச மேகழ நீண்டுகைக்கே*

பதப்பிரிவு :—புலை ஆம் பிறவி பிறந்து என் செய்தோம் பொன்னி பொன் கொழிக்கும் அலை ஆர் திரு அரங்கத்து எம் பிரான் நமது அன்னையொடும் தொலையாத கானம் கடந்த அ நாள் தடம் தோறும் புல் ஆய் சிலை ஆய் கிடந்து இலமே நெஞ்சமே கழல் தீண்டுகைக்கு ஏ.

### பதவுரை.

நெஞ்சே-என்மனமே! புலை - இழிவு, ஆம்-ஆகிய, பிறவி - இந்த மனிதப் பிறவி, பிறந்து - பிறந்து, என் செய்தோம் - என்ன பயன் அடைந்தோம்! (ஒன்றுமில்லை ; ஆகையால் இதனைவிட)

பொன்னி - காவிரி நதியானது, பொன்-பொன்னை, கொழிக்கும் - கரையில் ஒதுக்குகின்ற, அலை - அலைகள், ஆர் - பொருந்திய, திரு அரங்கத்து - ஸ்ரீரங்கத்தில் உள்ள, எம் பிரான் - நமது பெருமான், (இராமனாக அவதரித்து) நமது - நம்முடைய, அன்னையொடும் - தாயாகிய சீதையுடன், தொலையாத - முடிவற்ற, கானம் - காட்டினை, கடந்த - கடந்து சென்ற, அந்நாள் - அந்தக் காலத்தில், கழல் - அவரது திருவடிகளை, தீண்டுகைக்கு - தீண்டும்படி, தடம்தோறும்- அவர் நடந்த வழியெல்லாம், புல் ஆய் - புல்லாக வேனும், சிலை ஆய் - கல்லாகவேனும், கிடந்து இலமே - கிடக்காமல் போனேமே.

கருத்து :—நானுகச் சென்று திருவரங்கனது பாதங்களை அடையப் பெற்றிலேன். ஆதலின், இம் மனிதப்பிறவி எடுத்திருப்பதைவிடத் தண்டகவனத்தில் கல்லாய்ப் புல்லாய்க் கிடந்திருப்பேனுயின் எம் பெருமான் தானுக வந்து தன் திருவடிகளைத் தந்திருப்பாரன்றே! என்று கவி, தனக்குள்ளே நினைத்துக்கொள்வதைத்தான் தன் நெஞ்சொடு பேசுவது போல் பாடியிருக்கின்றார்.

குறிப்பு.—மனிதப்பிறவியை விட, புல்லுங் கல்லும் தாழ்ந்தனவாயினும், அந்தத் தாழ்மையை அடைவதில் பயன் பெரிதுண்டு என்று மதித்து, அதனை அடைய வேண்டுவதால், இந்தச் செய்யுளில் வேண்டல் அணி அமைந்திருக்கின்றது. வடமொழியில் இவ்வணியை அநுக்ஞாலங்காரம் என்பர். ஒரு குற்றம் அல்லது தாழ்மையில் நன்மை இருக்கின்றது என்று மதித்து,அக்குற்றம் அல்லது தாழ்மையை அடைந்தும் அதனல்வரும்நன்மையை அடையவேண்டும்என்று கூறுவது இவ்வணியின் இலக்கணம்.முன் திருவரங்கத்தந்தாதியில், 'வாராக வாமனனே' என்னும் செய்யுளில் (2 வால்யூம் 868வது பக்கம்), 'மன்மதனும் மடவாராக ஆதரம் செய்வன்' என்று கூறியிருப்பதும் வேண்டலணியே. மன்மதனுகிய கடவுள் ஒரு மடவாள் ஆகவேண்டு மென்பது, தானிருப்பதனிலும் தாழ்ந்த நிலையை அடைய விரும்புவதாம்; அவ்வாறு தாழ்வதால் திருமாலைத் தழுவலாம் என்ற நன்மையைப் பெறவிருத்தலால் அதை விரும்புவதாகக் கூறப்பட்டிருக்கின்றது. செல்வமுடைய வாழ்வில் அமிழ்ந்திருக்கும்போது மாந்தர் கடவுளை நினைப்பதில்லை; துன்பப்படும்போது தெய்வத்தை நினைக்கின்றனர் ; என்னுமிந்த இயற்கையை மனத்திற்கொண்டு ஒருவன், "கடவுளே, நின் நினைவு என்னைவிட் டகலாதிருக்கும்படி எனக்கு எப்பொழுதும் துன்பத்தையே கொடுத்துக் கொண்டிரு" என்று பிரார்த்திப்பானுயின், தெய்வஸ்மரணை என்ற நன்மை அடையும்பொருட்டுத் துன்பமாகிய குற்றம் வேண்டப்படுவதால், இது வேண்டலணியாகும்.

---

*வாயினி ரங்கினை யாரமெ றிந்தனை வால்வளை*
*சிந்தினை தண்*
*பாயலை யுந்தினை மாலைய டைந்தனை பாரினு*
*றங்கிலையால்*
*கோயில ரங்கனை மாகன கந்திகழ் கோகன*
*கம்பொலியு*
*மாயிழை நண்பனை நீயும்வி ரும்பினை யாகுநெ*
*டுங்கடலே.* 7.

பதப்பிரிவு:—வாயின் இரங்கினை ஆரம் எறிந்தனை வால்வளை சிந்தினை தண் பாய் அலை—பாயலை - உந்தினை மாலை அடைந்தனை பாரில் உறங்கிலை ஆல் கோயில் அரங்கனை மா கனகம் திகழ் கோகனகம் பொலியும் ஆய் இழை நண்பனை நீயும் விரும்பினை ஆகும் நெடும் கடல் ஏ.

### பதவுரை.

நெடும் - பெரிய, கடலே - சமுத்திரமே,

(நான்தான், வாயின் இரங்குகின்றேன் - வாயால் புலம்புகின்றேன் ; ஆரம் எறிகின்றேன் - மாலையை அகற்றிவிடுகின்றேன்; வால்வளை சிந்தினேன் - வெண்மையான கைவளைகளை உகுத்துவிடுகின்றேன்; தண் பாயலை உந்தினேன் - குளிர்ந்த மலர்ப்படுக்கையைத் தள்ளிவிடுகின்றேன்; மாலை அடைந்தேன் - காமத்தை அடைந்துளேன்; பாரில் உறங்கிலேன் - பூமியில் நித்திரை கொண்டிலேன்), அரங்கனைக் காதலித்த விரக தாபத்தால் நான் இப்படி எல்லாம் செய்ய என்னைப் போலவே நீயும்,—

வாயின் - நீயிருக்குமிடத்தில், இரங்கினை - ஆரவாரம் செய்கின்றாய்; ஆரம் - முத்துக்களை, எறிந்தனை - எறிகின்றாய்; வால் - வெண்மையான, வளை - சங்குகளை,சிந்தினை - சிந்துகின்றாய்; தண் - குளிர்ந்த, பாய் - பாய்கின்ற, அலை- அலைகளை, உந்தினை - தள்ளுகின்றாய்; மாலை - பெருமையை (அல்லது கருமையை) அடைந்தனை - பெற்றிருக்கின்றாய்; பாரில் - பூமியில், உறங்கிலை - தூக்கமின்றிப் புரண்டவண்ணமா யிருக்கின்றாய், (ஆல், அசை), (ஆகையால்)

நீயும் - நீயுங்கூட, (என்னைப்போல) கோயில் அரங்கனை - திருவரங்கக்கோயிலில் இருப்பவனும்;



மா - சிறந்த, கனகம் - பொன்னிறமாகி, திகழ் - பிரகாசிக்கின்ற, கோகனகம் - செந்தாமரையில், பொலியும் - விளங்கும், ஆய் இழை - ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த இலக்குமியின், நண்பனை - நாயகனும் ஆகிய திருமாலை, விரும்பினை - காதலித்தவள், ஆகும் - ஆகவேண்டும்.

கருத்து:—கவி தன்னை அரங்கனது காதலியாகப் பாவித்துக்கொண்டு தன் நிலைமையையும் கடலின் நிலைமையையும் ஒப்பு நோக்கி, "வேட்கை மிகுதியால் நான்தான், திருமகளுக்கு நாயகனுயிருக்கின்றான் என்பதையுங் கருதாமல் அரங்கனைக் காதலிக்கின்றேன் என்றால், ஏ, கடலே, நீயுமா காதலிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

குறிப்பு:—காமநோயுடைய ஒருத்தியும் கடலும் ஒன்றானது சிலேடையினல். இதனில் 'பாயலை' என்பது பிரிமொழிச்சிலேடை, மற்றவை செம்மொழிச் சிலேடை. பாயலை என்பது இரண்டாம் வேற்றுமை உருபு விரிந்த பெயர்ச்சொல் ஒன்றாய் 'படுக்கையை' என்ற பொருளில் காதலிக்குப் பொருந்தும்; அதனையே,பாய் + அலை என இரண்டுசொற்களாய்ப்பிரித்துப் 'பாய்கின்ற அலை' என்று பொருள்பட வினைத்தொகையாய்க் கொண்டால், கடலுக்குப் பொருத்தலாம். சிலேடையின் இலக்கணவகைகளைப்பற்றித் திருவேங்கடமாலைப் பாடங்களில் (2 வது, வால்யூம் 611 வது பக்கம்) விளக்கியுள்ளோம். கடலின்பால் தானுக நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்குக் கவி தன்னுடைய கருத்தைச் சார்த்தியிருப்பதால், இச்செய்யுள் தற்குறிப்பேற்றவணி. அவ்வணி இங்குச் சிலேடைபற்றி வந்திருக்கின்றது.

---

*நீரி ருக்கமட மங்கை மீர்கிளிக*
*டாமி ருக்கமது கரமெலா*
*நிறைந்தி ருக்கமட வன்ன முன்னநிரை*
*யாயி ருக்கவுரை யாமல்யா*
*னாரி ருக்கினுமென் னெஞ்ச மல்லதொரு*
*வஞ்ச மற்றதுணை யில்லையென்*
*றாத ரத்தினொடு தூது விட்டபிழை*
*யாரி டத்துரைசெய் தாறுவேன்*
*சீரி ருக்குமறை முடிவு தேடரிய*
*திருவ ரங்கரைவ ணங்கியே*
*திருத்து ழாய்தரின்வி ரும்பி யேகொடுதி*
*ரும்பி யேவருத லின்றியே*
*வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை*
*மார்பி லேபெரிய தோளிலே*
*மயங்கி யின்புறமு யங்கி யென்னையும*
*றந்து தன்னையும றந்ததே.* 8.

### பதவுரை.

மட - இளமை பொருந்திய, மங்கைமீர் - என் தோழிப் பெண்களே! நீர்-நீங்களெல்லாரும், இருக்க -இருக்கவும், கிளிகள்தாம்-கிளிகள் எல்லாம், இருக்க- இருக்கவும் ; மதுகரம் - வண்டுகள், எல்லாம் - எல்லாம், நிறைந்து -நிறைந்து, இருக்க - இருக்கவும் ; மட - இளமைபொருந்திய, அன்னம் - அன்னங்கள், முன்னம் - எனக்கெதிரில், நிரை ஆய் - வரிசை ஆய், இருக்க - இருக்கவும்,

உரையாமல் - (உங்கள் ஒருவரையும் நம்பித் தூது போக) சொல்லாமல், யான் - நான், ஆர் இருக்கினும் - யார் இருந்தபோதிலும், என் - என்னுடைய, நெஞ்சம் - மனது, அல்லது - தவிர, ஒரு - ஒரு, வஞ்சம் - வஞ்சனை, அற்ற - இல்லாத, துணை - துணை, இல்லை என்று - எனக்கு இல்லை யென்றுநினைத்து, ஆதரத்தினொடு - மிகுந்த அன்போடு, தூதுவிட்ட - (அந்த மனதைத் திருவரங்கன்பால்) தூது அனுப்பிய, பிழை தப்பிதத்தை, யார் இடத்து - யாரிடத்தில், உரை செய்து - சொல்லி, ஆறுவேன் - துன்பந்தணிவேன்:—(ஏனெனில், என் மனமோ முழுமோசம் செய்துவிட்டது. எவ்வாறென்றால்—)

சீர் - சிறப்பு, இருக்கும் - பொருந்திய, மறை - வேதங்களாலும், முடிவு -முடிவு, தேட - தேடுவதற்கு, அரிய - இயலாத, திருஅரங்கரை - ஸ்ரீரங்கநாதரை, வணங்கி - தொழுது, (அவர்) திருத்துழாய்- துளசியை, தரில் - (என் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக) கொடுப்பாராறல், விரும்பி - விருப்பத்தோடு, கொடு - அதனைப் பெற்றுக்கொண்டு (நான் சொல்லியனுப்பியபடி) திரும்பியே-திரும்பி, வருதல் - வருவது, இன்றியே - இல்லாமலே,-(அம்மனமானது)—

வார் - தோல்கச்சு, இருக்கும்-பொருந்திய, முலை - முலைகளையுடைய, மலர்மடந்தை - தாமரையில் வசிப்பவளாகிய இலக்குமி, உறை -தங்கியுள்ள, மார்பிலே- அவரது மார்பிலும், பெரிய - பெரிய, தோளிலே - தோள்களிலும், மயங்கி - காமமயக்கங்கொண்டு, இன்பு உற - இன்பம் உண்டாக, முயங்கி - அணைத்துக்கொண்டு, (அந்த ஆநந்தத்தால்) என்னையும் - தூதனுப்பிய என்னையும், மறந்து - மறந்துவிட்டு, தன்னையும் - தூதாகச் சென்ற தன்னையுமே, மறந்ததே-மறந்துவிட்டதே—(நானினி என்னசெய்வேன்)

கருத்து:—தன்னுடைய மனம் எப்பொழுதும் திருவரங்கனிடத்திலே தங்கியிருக்கின்ற தென்பதையும், அதனல் தான் ஆனந்த பரவசராகி யிருப்பதையும் பிள்ளைபெருமாள் ஐயங்கார் இவ்வண்ணம் நெஞ்சுவிடுதூது என்னுந் துறையில் அமைத்து அழகாகப் பாடுகின்றார்.

விரிவுரை:—தோழிமாரும் தன்னைப்போன்றபருவ மங்கையர் ஆதலால், கண்டவர் மனங்கவரும் அழகுடைய திருவரங்கனிடத்தில் அவர்களைத் தூதனுப்பினல் அவர்களே மோகங்கொண்டு தன்காரியத்தைக் கைவிட்டுவிடுவார்களென்று அயிர்த்தும்; சொன்னதைத்தான் சொல்லுமே அல்லாது சமயோசிதமாய்த் தன் சுயபுத்திகொண்டு பேசித் திருவரங்கரை இணங்கச்செய்யும் சக்தியில்லாக் கிளிகளை அனுப்பிப் பயனில்லையென்றும், கட்குடியரை நம்பி ஒரு காரியத்திற் கனுப்புவது மதியீனமென்று வண்டுகளை அனுப்பத் துணியாமலும், பிரிக்க முடியாத பாலும் நீரையுமே பிரிக்கும் தொழிலையுடைய அன்னத்தை அனுப்பினல் அது தன் குணத்தையே அங்குக் காட்டிக் கூட்டிவைக்காது போகுமோ என அஞ்சியும், அவைகளைத் தூதுஅனுப்பாது தன் நெஞ்சையே தனக்கு வஞ்சமற்ற துணைஎன்று காதல்தூது போக்கினர் கவி.

குறிப்பு:—இன்றைய பாடத்து மூன்று செய்யுள்களிலும் வந்துள குற்றியலுகர ஈற்றுப் புணர்ச்சிகளை

யெல்லாம் தேடியெடுத்துப் பயிற்சி செய்துகொள்வது நலம்.

### இலக்கணம்

நிலைமொழியீற்றில் இருப்பது குற்றியலுகரமாயின் அது வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது கெட்டுப்போய்விட நின்றமெய்யின்மேல், வருமொழி முதல்உயிர் ஏறிக்கொள்ளும் என்றும், நிலைமொழியீற்றிலிருப்பது முற்றியலுகரமாயின் அது வருமொழி முதலுயிரோடு புணரும்போது கெடாமல், 'ஏனையுயிர்வழி வவ்வும்' என்ற விதிக்கு இணங்கி வகரஉடம்படுமெய் வர, அவ்வுடம்படு மெய்யின்மேல் வருமொழி உயிர் ஏறலாகும் என்றும், உகர ஈற்றுச்சொற்கள் உயிரோடு புணர்கின்ற இலக்கணத்தைப் பொதுவகையில் இதுவரையில் கண்டோம்:—

i நாடு + அடைந்தான் = நாட் உ + அடைந்தான்
= நாட் + அடைந்தான்
= நாடடைந்தான்.

அழுது + இறந்தாள் = அழுத் உ + இறந்தாள்
= அழுத் + இறந்தாள்
= அழுதிறந்தாள்.

குற்றியலுகரத்திற்குப் பிறகு உயிர் வர, அது கெட்டு, வருமொழி உயிர், நிலைமொழியிறுதியில் எஞ்சி நின்ற மெய்யின்மேல் ஏறியது.

ii கொலு + அமர்ந்தான் = கொலு வ் + அமர்ந்தான்
= கொலு வமர்ந்தான்.

உரு + இல்லை = உரு வ் + இல்லை
= உருவில்லை

முற்றியலுகரத்திற்குப்பிறகு உயிர்வர அதுகெடாமல் வகர உடம்படுமெய் வந்தது.

இவ்விரண்டு விதிகள் பெரும்பான்மை உகர வீற்றுச் சொற்களுக்கெல்லாம் பொருந்துமாயினும் சிற்சில சொற்கள்மாத்திரம் இவ்விதிகளுக்கு இணங்காமல் புணர்வதும் உண்டு.

I முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப்போல் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழி முதலுயிர் ஏறலாவதையும் காணலாம். அவ்வாறுவது, பின் வரும் சொற்களில் நேர்கின்றது:—

i 'ஏழு' என்னும் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம், ழ் என்னும் இடையின மெய்யில் ஏறியிருப்பதால் முற்றியலகர மாகும். ஆயினும், அது வருமொழி முதல் உயிரோடு புணரும்போது பொதுவிதியின்படி வகர உடம்படுமெய் பெறாமல், குற்றியலுகரத்தைப்போல் கெட்டுவிட, வருமுயிர் அந்த மெய்யின்மேல் ஏறிக்கொள்கின்றது.

ஏழு + இலை = ஏழ்உ + இலை = ஏழ் + இலை = ஏழிலை.
ஏழு + உலகம் = ஏழ்உ + உலகம் = ஏழ் + உலகம் =
ஏழுலகம்

'ஏழு' என்ற சொல்லிற்குமாத்திரம் இவ்விலக்கணம் பொருந்தும். இதனிலிருந்து, ழ் என்னும் மெய்யின்மே லேறிமுடிகின்ற முற்றியலுகரங்களெல்லாம் இவ்வாறு குற்றியலுகரம்போலவே புணரும் என்று கொள்ளலாகாது;

மழு + ஏந்தி = மழுவ் + ஏந்தி = மழுவேந்தி

என மற்றச் சொற்கள் உடம்படுமெய் பெற்றே புணரும்.

ii. கரவு உறவு கனவு கதவு களவு உழவு மகவு உதவு, என்பனபோல் வ் என்னும் இடையின மெய்யின்மேல்ஏறிமுடிகின்ற முற்றியலுகரங்கள் எல்லாம், வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது குற்றியலுகரம்போலக் கெடுகின்றன.

கதவு + ஆடியது = கதவ்உ + ஆடியது = கதவ் + ஆடியது = கதவாடியது.
மகவு + அழுதது = மகவ்உ + அழுதது
= மகவழுதது.
உதவு + என்றான் = உதவ்உ + என்றான் = உதவ் + என்றான் = உதவென்றான்.

எனவே, ஏழு என்னும் சொல்லும், வு என்னும் எழுத்தில் முடிகின்ற சொற்களும், முற்றியலுகரஈறாக இருந்தாலும், உடம்படுமெய் பெற்று வருமொழி முதலுயிரோடு புணரா அவ்வாறு புணர்த்தினால் பிழையாம். ஏழரசர், என்பதே நேர், ஏழுவரசர் என்பது பிழை. உறவில்லை, என்பதே நேர், உறவுவில்லை என்பது பிழை.

iii. அது இது எது என்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரம் வல்லின மெய்யின்மேல் ஏறியிருந்தாலும் (அச்சொற்கள் இரண்டு குறில்களால் ஆனவையாதலால்) முற்றியலுகரம் ஆகும். இந்த உகரம் வருமொழிமுதல் உயிரோடு புணரும்போது, முற்றியலுகரம்போல் வகர உடப்படுமெய் பெற்றேனும், குற்றியலுகரம்போல் கெட்டேனும் இருவிதமாகவும் புணரலாம். இரண்டும் பிழை இல்லை.

இது + இல்லை = இதுவ் + இல்லை = இதுவில்லை.
அல்லது, இத்உ + இல்லை = இத் + இல்லை = இதில்லை.
அது + ஒரு = அதுவொரு, அல்லது அதொரு
எது + அறம் = எது வறம், அல்லது, எதறம்.

செய்யுளில், அது + அன்று, என்று சேரும்போது, நிலைமொழியீற்று உகரம் கெடுவது மல்லாமல், வருமொழி முதல் அகரம் ஆ என்று நீண்டு பிறகு, அந்த மெய்யின்மேல் ஏறும்.

அது + அன்று = அத்உ + அன்று, அத் + அன்று
= அத் + ஆன்று = அதான்று.

II. முற்றியலுகரங்களும் சிற்சில சொற்களில் குற்றியலுகரம்போல், உயிர்வரக் கெடுவதைக்கண்டோம். இனிக் குற்றியலுகரங்களும் அபூர்வமாகக் கெடாமல் முற்றியலுகரத்தைப்போல் உடம்படுமெய் பெற்றுப் புணரவும் நேர்கின்றது.

i. சிற்சில சமயங்களில், செய்யுள்களில், குற்றியலுகர ஈற்றுச் சொற்களோடு ஏ, உம், முதலிய இடைச்சொற்கள் சேருங்கால், ஓசை இன்பம் நோக்கி, அக்குற்றியலுகரம், பொதுவிதியின்படி கெடாமல் நின்று முற்றியலுகரம்போல் உடன்படுமெய் பெற்றுப் புணரும்.

அடைவது + ஏ = என்பது சாதாரணமாய் அடைவதே எனப்புணரும். ஆனால் திருவரங்கத்தந்தாதி 26வது செய்யுளில் அது, அடைவது + ஏ = அடைவதுவ் + ஏ = அடைவதுவே, எனப் புணர்ந்திருக்கின்றது.

கொண்டது + ஏ = கொண்டதுவே—(சிலப்பதிகாரம் கானல் வரி. 18-வது செய்யுள்)

அடைவதுவே, கொண்டதுவே என்று எழுதினாலும் செய்யுளிற் பிழையாகாதென்றபோதிலும் சாதாரணமாக, அடைவதே கொண்டதே என்றுதான் புணரவேண்டும்.



இப்படியே, சிற்சில இடங்களில், உடுப்பது + உம், உண்பது + உம், உடுப்பதும் உண்பதும் என்னக் குற்றியலுகரங் கெட்டுப் புணராமல், உடுப்பதுவும், உண்பதுவும்என்று உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்திருக்கவுங் காணலாம். (கம்பர்)

இவ்வாறு இருவிதமாகவும், த் என்னும் வல்லின மெய்யின்மேல் ஏறி முடிகின்ற குற்றியலுகரங்களே புணர்கின்றனவேயன்றி, மற்ற வல்லின மெய்யின்மேல் ஏறியிருக்கின்ற குற்றியலுகரங்கள் புணரக்காணோம். சு, டு, பு, று, என்று முடிகின்ற சொற்கள் எப்பொழுதும் குற்றியலுகரங் கெட்டே புணர்கின்றன; உடன்படுமெய் பெறுவதில்லை.

ii குற்றியலுகரம் என்பது தமிழ்மொழி இலக்கணத்திற்கே உரிய ஓர் எழுத்து. ஆதலால், சம்பு சாம்பு, சுயம்பு, ஹேது, போன்ற சமஸ்கிருத பதங்களின் ஈற்றிலுள்ள உகரங்கள், வல்லின மெய்யின்மேல் ஏறியிருந்தாலும், குற்றியலுகரங்கள் ஆகா. எனவே, வருமொழி முதல் உயிரோடு புணரும்போது அவை கெடாமல், உடம்படுமெய்யே பெறும்.

சுயம்பு + ஏ = சுயம்புவே (தாயுமானவர்)
சாம்பு + அன்று = சாம்புவன்று—(கம்பர்)
(சாம்பு - பறை)
ஹேது + ஆய் = ஹேதுவாய் (நளவெண்பா)
(ஹேது - காரணம்)

ஹேது என்னும் வடமொழி தமிழில் 'ஏது' என எழுதப்படுகின்றது. ஆனால் 'ஏது' என்று வினவுகின்ற இயற்கைத் தமிழ்ப்பதமும் வேறு இருக்கின்றது. எனவே, இந்தப் பதம், காரணம் என்ற அர்த்தத்தில் வருமானால், வடமொழியாய் நின்று உடன்படுமெய் பெறும்:—

இச்செயல் நரகத்திற்கு ஏது + ஆகும் = ஏதுவாகும். ஏதாகும் என்பது பிழை.

மற்று, ஏது, (என்ன என்ற பொருளில் வரும்) தமிழ்மொழியானால் உகரம் கெடும்:—

அவன் கதி ஏது + ஆகும் = ஏதாகும்.
ஏதுவாகும் என்று இங்கு எழுதுவது பிழை.

# வில்லி பாரத விளக்கம்

189083.

## சபா பருவம்.

### சூதுபோர்ச் சருக்கம்.

933வது பக்கத் தொடர்ச்சி.

பொய்யா விளையுள் நிலமாகிய மனதின்கண் பிறர் செய்யும் வினைகளை யூன்றவைத்துச் சினமென்னுந் தண்ணீர்விட்டு வளர்த்த துச்சாதனனுக்குத் தான் வளர்த்த தருவின் பயனைக்காட்ட நல்லதொரு சமயம் வாய்த்தது. வீமனது வெடி நகையையு மவனது குலக்கொடியின் குறுநகையையு முதன்முதலிற் சுட்டிக்காட்டி வெகுளியைத் தன் அண்ணன் மனதில் சூட்டினான். பின்னரக்கனலை வளர்க்கத் தீக்கடைக்கோற் சில வுதவலாயினன்.

எத்தனை தரணி வேந்தர் யாகநல் விழாவில் வந்தா
ரத்தனை பேரில் யாமு மொருவரா யடங்கி நின்றேங்
கொத்தனை யுகளு நன்னீர்க் குருநிலக் கோமா னந்த
முத்தனை யன்றிப் பின்னை யாரையே முதன்மை
[செய்தான்

[நிலத்தையாளும் மன்னர் எத்தனைபேர் இராசசூயயாகத் திருவிழாவிலே வந்திருந்தார்கள்; அத்தனை மன்னரில் நாமும் சாதாரண மன்னராய் ஒடுங்கிக்கிடந்தோம்; தொகுதிகளாய்(கொத்து) அனையென்னும் மீன்புரளுகின்றநீர்வளம் பொருந்திய குருநாட்டை யாளும் தருமன், நந்தன்மேற் பிரியங்கொண்ட கண்ணனையன்றி வேறே யாரை முதன்மையாகப் பாராட்டினான்?]

கோயில்களில் 'முன் மரியாதை' யென்பதொன்றுண்டு. அதன் காரணமா யேற்படுஞ் சச்சரவுகள் கணக்கில்லாதன. இதற்காக நியாயசபை யேறியவர் பலர். இதை முன்னிட்டு நிகழுங் கொலைகளும் பலவுண்டு. இவற்றிற்கெல்லாந் தலைக்காரணங் கௌரவமே போலும்.

நூற்றுக்கணக்கான வேந்தரில் நாமு மொருவராய்த் தனிச்சிறப்பின்றி நின்றோம். மனிதர்க்குத் தெரிந்த உலகம்முழுவதையு மாளும் நமக்கு யாதொரு சிறப்புமில்லாமற் போயதற்குக் காரண மென்னவெனில், தருமன் தன்னை நம்மினு முயர்ந்தோனா யெண்ணியிருப்பதுதான். நம்மை யவருருக் கழைத்தது நம்மினும் மேம்பட்டா ருளரென்று குறிப்பிடவும், அவரெல்லோருந் தன்க் காட்பட்டாரென்று காட்டவுமே போலும். அவன் முதன்மையாகக் கொண்டவனும் யாவன்? அவன்றான், தன் தகப்பனை விட்டு வேறொருவன்மேல் தகப்பனுக்குக் காட்டற்குரிய நேயமனைத்தையுங் காட்டிநின்ற கண்ணன். இவன் இயற்கைக்கு விரோதமாய்ச் செய்ததை, இயற்கைக்கு மாறானவொருவனிடத்திற் காட்டிய அன்பே நிரூபித்தது. மேலும் ஆயனை முதன்மையாக்கியது, அவனறிவையும் விளக்கி நின்றது. 'அந்த முத்தனை யன்றி' என்று மொழி பிரித்து, அந்த (முக்தனை) வீடு பேற்றிற்குக் காரணனாய கண்ணனை, யென்று கூறின் துச்சாதனன் பழித்துக்கூறும் பொருள் துலங்காது. இனிக் கோமான், என்பதை விளியாக்கித் தருமன் என்று தோன்றா யெழுவாயை யமைத்துப் பொருள்கூறலுமமையும். வளநாடுடையகோன் நீயிருக்க முத்தனை முதன்மை செய்தது அடாதென்பதாம்.

நந்தகோபனது புதல்வனுக்குத் தருமன் செய்த சிறப்புக்களைக் கண்டு, வந்திருந்த அரசரெல்லாம் வாய்திறவாமல் நிற்ப, எதிர்த்துக் கூறிய சிசுபாலனைக் கண்ணனைக்கொண்டு கொல்வித்தான். இவன் வேள்வி செய்த நோக்கத்தை இப்போது கண்டுகொள்வீர். தன் வலியுந் தம்பியர் வலியும் மாயன் வலியும் பிறருக்குத் தோற்றுவித்து, "யாரையுந் தன்கீழாக்கி மின்புயலனையான் மேன்மை [illegible] நவே வேள்வி செய்தான்" யாவருக்கு மேலானவனாய்த் தான் விளங்கவேதா னிவ்

வேள்வி செய்ததும். இவ்வமயம்கன்ன னூரிலில்லே. "சல்லிய மிகுபோர் செய்யச் சல்லியன் றன்மேற் சென்றான்" அடர்ப்பதற்கும் நமது கருமம் கைகூடற் கும் இதுவே சமயமாதலால் இப்போதே போர்க் கெழுமின் என்று துச்சாதனன் சொல்லி முடித்தான். வேந்தனு மதற் கொருப்பட்டவனாய்,

வஞ்சனை கொண்டே யாதல் வாரண மணித்தேர் வாசி
நஞ்சனை யவரா லாதல் நாளையே யழித்தல் வேண்டுங்
கஞ்சனை மலையவெண்ணிக் கரியபேய்முலைப்பாலுண்ட
நெஞ்சின னெய்தா முன்ன னீர்விரைந் தெழுமி
[னென்றான்.

[வாரணம் - யானை; வாசி - குதிரை; நஞ்சனையவர் - கொடிய காலாட்படைகள்]

வஞ்சனையாலாவது போர்முகத்தாலாவது ஒன்னலர் பட்டிமையை யறிந்து கொல்லவல்ல மாயன் எய்துவ தற்குமுன் அவர்களை வெல்வதே முறை, யென்றான். அதற்குக் கன்ன னுடம்படவில்லை.

[ந்த
வெஞ்சிலை குனித்தோரம்பியான் விடின்வெகுண்டவே
ரெஞ்சிவிண் புகுவரல்லால் யாவரே யெதிர்க்கவல்லார்
வஞ்சனை கொண்டுவெல்ல மதிப்பது வாளால்வெல்ல
வஞ்சின மாயி னன்றோ வென்றன னங்கர் கோமான்

[அங்க நாட்டின் அரசாகிய கன்னன் "கொடிய வில்லை வளைத்து ஓரம்பை யான் விட்டால், சினத்தோடு எதிரிட்ட அரசர்கள் இறந்து மேலுலகம் புகுவரல்லாமல் யாரென்னை எதிர்க்க வல்லவர்? வஞ்சனையால் வெல்ல எண்ணுவது வாளால் நாம் வெல்வதற்குப் பயந்தாலன்றோ?]

கன்னனைப்பற்றிக் கவி கொண்ட கருத்திற்கேற்ப, இங்கு அவன் வீண் ஆடம்பரக்காரனாய்த் தோற்று விக்கப்பட்டான். ஓரம்பினாற் பகைவரை விண்ணுடு புகுத்தும் யானிருக்க வஞ்சனையா லேனோ வெல்ல நினைக்கின்றீர்; போர்புகுமி னென்று கன்னன் கழறி னான்.

இதைக் கேட்ட சகுனி, சொல்வான்.

'மேவருகன்னனன்றி விண்ணுளோ ரெதிர்ந்தபோதும்
கோவரு முன்றிலானைக் கொடுஞ்சமர் வெல்லலாமோ'

கன்னன்மட்டுமல்லன்; வேறுதேவர்கள் வந்தபோதும், தன்னைக் காணற்பொருட்டு வரு மரசகூட்டங்களே கணக்கின்றி நிறைந்த வாயிலையுடைய தருமனை வெல் வது கூடுமோ?

இடிம்பனைப் பகனை வைவே லிகற்சரா சந்தன் றன்னை
நெடும்பணைப் புயத்தால் வென்றநிகரிலா வீமன்நிற்கக்
கடும்படைப் பெருமை யால்வென் றாணலா மென்ப
[ராயிற்
றொடும்படைத் தடக்கை வீரர்க் குத்தரஞ் சொல்ல
[லாமோ.

[இடிம்பனையும், பகனையும், கூரிய வேலையுடைய வலி பொருந்திய சராசந்தனையும், தன் நீண்ட பருத்த தோள் வலியால் வென்ற ஒப்பற்ற வீமன், தருமனுக்குத் துணையாய் நிற்கவும், கொடிய படையின் மகிமையைக் கொண்டு தரு மனைப் புறங்காணலாமென்று சொன்னால், அவ்வாறு சொல் பவரான ஆயுதங்கொண்ட பெரிய கைகளையுடைய வீரர் களுக்கு நான் என்ன பதிலுரைப்பேன்]

வீமனை யாரென்று நினைத்தீர்? அவன் வென் றுள்ள பகைவர் தொகுதியையும் மறந்தீரோ? அவ னுக்குத் தோற்றவர் ஒருவரல்ல ரிருவரல்லர். அவ ரும் நம்மைப்போல் சாமானிய மனிதருமல்லர். வீமன் இளம்பருவத்தே இடிம்பனைக் கொன்றான்; பார்ப்ப னிக்குதவப் பகனைமடித்தான்; கண்ணனஞ்சிய சராசந் தனையும் சமரில்வீட்டினான். இத்தனை அசுரரைக்கொன் றதும் ஆயுதங்கொண்டன்று. தன்தோள்வலியாலேயே அவர்களைத் தோற்கடித்தான். இவற்றை யறிந்தும், படையின் பெருக்கத்தாலும், போரின்பெருமையாலும் அவனையு மவனைச் சேர்ந்தோரையும் வெரின்காணஇய லுமென்னு மிப்படைதொட்ட நெடுங்கை வீரருக்கு என்னாற் சொல்ல வல்லதுண்டோ? ஆயினும் ஒன்று கூறுவன் யான்.

[தோள் வேட்டுக்
துப்புற ழுமுதச் செவ்வாய்த் திரௌபதி துணைத்
கைப்படு சிலையி னேடுங் காவலர் கலங்கி வீழ [போது
மெய்ப்படு முனியாய் வந்து விசயன்வில் லிறுத்த
மிப்பொழு திருந்த வீரர் யாவரு மிருந்தி லேமோ

[துப்பு உறழ் - பவளத்தை ஒத்த; வேட்டு - விரும்பி]

வீமனது தோள்வலி வில்லின்முன் என்செய மாட்டு மென்பீரேல், வேத்திரகிய மாநகரில் வேதிய னாய் வந்த விசயன் விற்பிடித்துச் சுழலுமியந்திரத்தை யெளிதில் வீழ்த்தியபோது நாமும் அங்கிருந்தோமே. இருந்தும் சிலையேந்திய மன்னரோடு சிலையுருவங் கொண்டு தம்பித்து நின்றோம். அக்காலம் நமது வில் லாண்மை போயவழி யென்புல்லறிவிற் கெட்டிலது. ஒருவேளை 'விசயன்' என்பான் தன்னை வெல்ல வல்லவ ரில்லாதா னாதலால் அவனையு நீக்கவேண்டு மென்பீரோ? அற்றேல் தருமனுக்குத் துணையாயவர் இவரிருவருமே. இத்தகைய தம்பிகளை யுடையவன் படைக் கஞ்சான்.

யாவரு மிருந்திலேமோ வென வுளப்பாட்டுத் தன் மைப்பன்மையாய்க்கூறியது, அதனாலேற்படு மிழிவின் கூர்மையை நீக்கவேயாம். கன்னனு மிருந்து பின்னால் நிகழ்ந்தபோரில் புடைப்புண்டு திரும்பவில்லையோ வென்று சொல்லாது சொன்னான் சகுனி. இப்பிறவி யிலேயேயன்றி யெப்பிறப்பிலும் எய்ப்பு இறப்பற்ற, உண்மை பேசுதலை யொழிக்காத தருமனை வெல்ல முடியாது. ஆகையால்,

தப்பறச் சூது கொண்டு சதிப்பதே கரும மென்றான்.

இதற்கேற்ற உபாயமென்னெனவினவிய துரியோத னனைப் பொற்பின்மிகு மண்டபமொன்றை யியற்றச் சொன்னான் சகுனி. இயற்றி,

[வந்தாற்
மண்டபங் காண வெம்முன் வருகவென் றழைத்து
கண்டுகண் களித்து மற்றக் காவல ரிருந்த போதிற்
புண்டர விசால நெற்றிப் புரவல பொழுது போக
வண்டரும் விரும்பும் வன்சூ தாடுதும் வருக வென்
[பேம்.

[இங்குப் புதுமையாய்க் கட்டிய மண்டபத்தைக் காண அண்ணனே வாரும், என்று அவரை நாம் அழைப்போம். வந்தால் பார்த்துக் களித்து அவ்வரச ரிருந்தபோது, புண் டரமென்னும் குறியைப் பரந்தநெற்றியி லணிந்த அரசே, பொழுதுகழிய விளையாட்டாகத் தேவர்களும் விரும்பும் சூதை யாடுவோம் வா, என்று அழைப்போம்]

மண்டபத்தை யியற்றியபின், புது மண்டபத்தைக் காண வம்மினென் றழைப்போம். வரின் அவர் அதைக்கண்டபோது, தமதுள்ளத்தி லெவ்வெண்ணங் கொள்ளினும் வெளிப்படையாய்க் களிகொள்வதாய்த் தெரிவிப்பார். அச்சமயம் சற்றே களியாட்டயர் வோமென்போம். மறுத்துக் கூறுவரேல், தேவர்களும் விரும்புஞ் சூதாதலால் நீ ராடுவதற் கென்னகுறை யென்று லவ ருடன்படுவர்.



அதிர்முரசுயர்த்தகோவு மையெனத் துணியும்பின்னை
மதிமரு ளியற்கைத் தாகு மாயவெஞ் சூது தன்னால்
விதியெனப் பொருது வாழ்வு மேதகு மரசுந் தங்கள்
பதிமுதற் பலவுந் தோற்கும் படிசெகுத் திடுவ லென்
[றான்

[ஒலிக்கின்ற முரசைக் கொடியிலெழுதி யுயர்த்தியுள்ள அரசனும் ஐயென்னும் ஒலிக்குறிப்போடு சம்மதத்தைத் தெரிவிப்பான்; பின்பு, புத்தியை மயக்கும் இயல்பையுடைய மாயமான கொடிய சூதினால் ஊழென்னும்படி ஆடி அவ ருடைய செல்வத்தையும், அரசையும், நாடு முதலிய யாவற் றையும் தோற்கும்படி செய்வேன், என்று கூறினான்]

சூதாட்டத்திற் சற்றே மனது சாய்ந்தவர் குடியர்களை ப்போல், முதலில் அது பொல்லாதென்று தடுப்பினும் சிறிது வற்புறுத்தினா லவர் பிறரைக் களிக்கச் செய் வதற்காகவே ஒருப்படுவதுபோலவத் தொழிலிற்பொ ருந்துவர். தருமனும் அவ்வாறே நடப்பன். சூதில் எனது வல்லமை பெரிதாதலால், அவனை யெளிதில் வெல்வேன். இச்சூது உன் போருக்குப் பின்வாங் கினதன்று. வெற்றியும் தோல்வியும்கொண்டு பெருஞ் செல்லங்களை யிழத்தற்குக் காரணமாயிருப்பதால் இச்சூதும் படைப்போருக்கு நேராகும்.

சகுனி சொன்ன வார்த்தைகள் துரியோதனன் முதலியோரைப் பெரிதும் மகிழ்வித்தன. விதுரன் மனதில்மட்டும் ஒருவகைத் துயரெழுந்தது. பொறு மையாலும் பேரவாவினாலும் அறிவிலிகள் செய்யப் புகும் வஞ்சனையைத் தடுப்பதே கடமையென மனத் திட் கொண்டான்.

வையமு மரசும் வாழ்வும் வாங்குகை கருத்தே யாயிற்
பொய்யடர் சூதுகொண்டு புன்மையிற் கவரவேண்டா
மையநின் றந்தை யோலையவருக் கெழுதிவிட்டால்
மெய்யுறமறுத்துச்சொல்லார் வேண்டின தருவரன்றே

[ஐய, நிலமும் அரசாட்சியும் செல்வமும் கவர்ந்துகொள் ளுதல் உமது கருத்தானால் பொய்கொண்ட சூதாட்டத்தில் அற்பத்தனமாய்ப் பிடுங்கிக்கொள்ள வேண்டிய தில்லையே. உனது தகப்பனிடஞ் சொல்லி ஐந்து பேருக்கும் ஓலை யெழுதி, எமது நாட்டைத்தாரீ ரென்று கேட்டால் உண்மை யில் அவர்கள் மறுத்துச் சொல்லாமல் வேண்டியதைத் தரு வார்கள்]

ஐய! அன்பிற்குரிய எனது செல்வ! யான் சொல் வது உன் மீதுள்ள அன்பினாலேயே யாதலால் அத னைச் சற்றே செவிசாய்த்தருள். புல்லிய வழியில், பிறவரசரெல்லாரும் பழிகூறத்தக்க விதத்தில், நாட் டைப் பிடிங்கிக்கொள்வதைவிட நேரிய வழியில், எமது நாட்டைத் திருப்பிக்கொடு மென்றா லவர் தடையின்றி யவ்வாறே செய்வர். நாடு உம்முடைய தென்றா லவர் மறுத்துச் சொல்லார்—மெய்யுடையவ ராதலால். அன்றியுந் தருமன் உம்மை வேறாயும், உமது தந்தையை வேறாயும் எண்ணுபவ னல்லன். அவனுக்குத் திருதராட்டிரனே தந்தையாதலால் தந் தைசொல் தவறான்.

தந்தைதன் னேவ லாலே தருமனுந் தம்பி மாரு [வர்
மிந்தமண் ணுடல் கைவிட் டெரிகெழு கானஞ் சேர்
முந்துற நுமதே யாகு முழுதும்வாழ் வெழுதுஞ்
[செய்பூம்
பைந்தொடையரசர் கேட்டாற் பாவமும் பழியுமாகா

[வாழ்வு முழுதும் நுமதேயாகும், ஓலை எழுதும், என் பது மூன்றாமடி]

'தந்தை வாக்கிய பரிபாலனஞ் செய்ய வேண்டித் தருமனும் மண்ணாள்வதை விட்டிடுவான்; பின்னரிங் கிருப்பின் நினக்கிடையூ றுண்டாமென, பாண்டு இளங்கோ தலைநகரைத் துறந்தவாறும்போல், இவன் காடாளச் செல்வான்; நினது நாட்டோ டவர்நாடுஞ் சேர்ந்து முழுச்செல்வமும் நின்னதே யாகும். பிற ரால் பழியுமுண்டாகாது.

தீதினால் வரித்து நெஞ்சந் தீயவ ராடு மாயச்
சூதினால்வென்று கொள்கை தோற்றமும் புகழுமன்று
போதினான் முகனு மாலும் புரிசடை யவனுங் கேள்வி
யாதிநான் மறையு முள்ள வளவுமிவ் வசைய றாதே.

[தீயகுணத்தால் சூதை மேற்கொண்டு மனதில்தீமைகுடி கொண்டவர் ஆடுகின்ற இந்த வஞ்சனை பொருந்திய சூதி னால்வென்று நாட்டைக் கொள்ளுதல் கம்பீரமாயும் இராது; புகழையுங் கொடாது; தாமரையில் வாழும் பிரமனும், திருமாலும், சடைமுடியை யுடைய சிவபிரானும், எழுதாது கர்ணபரம்பரையில் சொல்லப்பட்டுவருகிற பழைய நான்கு வேதங்களும் உள்ளவரையில் இந்தப்பழி நீங்காது]

மனிதர் செய்யும் நன்மைகளனைத்தும் அவருடலோ டழிந்து குழியிற் புதைக்கப்பட்டு, அவர் அறியாது செய்த இரண்டொரு குற்றங்கள்மட்டுமே பிறரால் தூற்றப்பட்டு நிலவுலகில் நிலைத்திருப்பது இயற்கை. உனக்கோ புகழுமில்லை. தீயவாடுஞ் சூதை மேற் கொள்வாயேயானால் நீதீயவனென்பதே உறுதிப்படும். உன் செயலும் அழகைத் தராது. கடவுளுள்ளளவும், கடவுளுண்டென்ற கொள்கை யுலகத்திலுள்ளளவும், இதனா லேற்படும் வசை மாறாது. நான்மறை யெவ் வாறு கேள்வியால் தலைமுறை தலைமுறைகளுக்கு ஓதப்பெற்று வருகின்றதோ, அதுபோல் உனக்கிதனா லேற்படும் வசையும் ஊழிகாலம் வரையில் நிலவும். அதனா லிதை யொழியென்றான் விண்ணவர் வியக் கும் வீறுடை யண்ணல் விதுரனும்.

என்றவ னுரைப்பக் கேட்டே
யெரியெழு மனத்த னாகி
யொன்றிய கேண்மைத் தந்தைக்
கொருபுடை வார முண்டோ
வன்றிறன் மைந்தர் வாழ்வு
வாங்கியின் றெமக்குத் தந்தான்
புன்றொழில் வசையே யன்றிப்
புகழ்கொலோ புகல்வ தம்மா.

[என்று அவன்சொல்லக்கேட்டுச் சினம் கொண்ட மனத் தனாய்த் துரியோதனன், இருவரிடத்தும் ஒத்துப் பொருந் திய உறவையுடைய என்தந்தைக்கு ஒருபக்கம் கண்ணோட் டம் உண்டோ? வலிபொருந்திய பாண்டுமைந்தரது செல்வத் தைவாங்கி யிப்போது எமக்குத் தந்தால் அவ்விழிதொழிலி னால்பழியேயல்லாமல் நீசொல்வதுபோல்புகழுமுண்டோ?]

விதுர னுரைக்கக்கேட்ட துரியோதனனுக்குச் சினம் மூண்டெழுந்தது. நீ சொன்னது நன்றாயிருந் தது. எமக்கு வசைவேண்டா, மெந் தந்தைக்கு வசை யுண்டாகட்டும் என்கிறீரே! இதுவென்ன புல மை? இருதிறத்தா ரிடையு மொத்த வன்பினனான வெந்தந்தையை யிதிற் றலையிடச்செய்து, அவருக்குப் பழியை யுண்டுபண்ணுவதோ நானவருக்குச் செய்யு முதவி? பாணலியினின்றுந் தீயில் விழுவதே சிறந்த பரிகாரம்போலும்! அவரவ்வாறு செய்வதற் கேதாவது காரணம் வேண்டுமே! காரணமின்றி யெங்ஙனமவர் நாட்டைக் கேட்பது? நீ காரணமுங் காட்டினாயில்லை,

உன் செய்கைகளையுங் கருத்துக்களையும் நானறியே னே. எமக் கனுகூலனைப் காட்டிப் பாண்டவர்பக்கம் நிற்பதே யுனக்குத் தொழில்.

நினக்கிதுதொழிலாலென்று நேயமுமவர்கண் மேலே
யெனக்குயிர்த் தந்தை நீயென் றியானுனை மகிழ்ந்து [காண்ப
னுனக்குமுன் கிளைக்குநாளு முண்டியும்வாழ்வுமிங்கே
மனக்கருத்தங்கேயென்றான் மாசுணத்துவசன்மாதோ

அரவக்கொடி யுயர்த்த கொடியோனும் ஆலங் கொட்டி ஆர்ப்பரித்து, "நீ கண்ணோட்ட முடையா யென்பதை யறிவேன். என்னிடத் தன்பாலேயோ ஈதுரைத்தாய்? எமது சூழ்ச்சியைத்தடுத் ததன் மூலமா யுனதன்பிற்குகந்த பாண்டவர் கேடுறுவண ணந் தடுப்பதற்கே யிங்ஙனங் கூறினாய். முதற்கோ ணல் முற்றுங் கோணலாய் முடியவே யிப்போது இடையிற் றடுக்கத் தொடங்கினாய். நீ நன்றிகெட்ட மகன். என்னாற் புரக்கப்பட் டெனக்கே கோடரிக் காம்பாய் நிற்கிறவன் நீயன்றோ" வென்று, உண்ட பாலும் விடமாய் மாறும் மாசுணத்தின் றன்மை பூண் டோன், விதுரனது நன்மொழியை விடமாகக்கொண் டவன்மேற் பொங்கி வீழ்ந்தான்.

டால்ஸ்டாய் எழுதிய

## எண்சாண் உடம்பிற் கெவ்வளவு நிலம் வேண்டும்.

### "HOW MUCH LAND A MAN NEED" BY TOLSTOY.

**1**

ருக்கிராமத்தில் வாழ்க்கைப்பட்ட தனது தங்கையைப் பார்த்துவிட்டுப்போகப் பட்டண வாஸத்திலிருந்து ஒரு தமக்கை நாட்டுப்புறம் வந்தாள். வந்த இவள், நகரத்தில் ஒரு வர்த்தகனை மணம்புரிந்திருந்தவள்; இளையவள் நாட்டுப்புறத்தில் ஒரு குடியானவனுடைய மனைவியாய் வாழ்க்கைப்பட்டவள். எனவே, பெரியவள்நகரத்தின் நாகரிகஒழுக்கங்களைப் பற்றியும் வசதிகள் ஸௌகரியங்களைப்பற்றியும் பேசத் தொடங்கினாள். "விதவிதமான உடைகளென்ன, துணிமணிகளென்ன, அன்றன்று மாற்றிக்கொள்ளும் ஆடைகளென்ன, குழந்தைகள் தரிக்கும் வகைவகையான பட்டுக்களென்ன, நானாவித சொக்காய்களென்ன, கடைகளில் கிடைக்கும் பல்வேறு பண்டங்களென்ன, பானங்களென்ன, அடிக்கடி நடைபெறும் விருந்துகளென்ன, சிற்றுண்டிக் கழகங்களென்ன, நாடகங்களென்ன, படக்கூத்துகளென்ன, உலாவரு மிடங்களென்ன, நடனங்களென்ன, சங்கீதக் கச்சேரிகளென்ன........." என்று அடுக்கலானாள்.

சின்னவளுக்கு ரோஷம் வந்துவிட்டது. 'கடைக்காரனுடைய வாழ்வு என்ன வாழ்வு! உழுதுண்டு வாழ்பவனுக்கு ஈடுஇணை யாவானு அவன்!" என்று ஆரம்பித்துவிட்டனள்:—

"என்ன வாழ்வு உங்கள் வாழ்வு. பதினாயிரம் பொன் கொடுத்தாலும் நான் அந்தப் பட்டணவாழ்வுக்கு உடன்பட மாட்டேன். நாங்கள் உங்களைப்போன்ற நாகரிகமில்லாதவர்களா யிருக்கலாம். ஆனால் எங்களுக்குக் கவலையென்பதில்லை. நீங்கள் உங்கள் தேவைக்கு மிதமிஞ்சிச் சம்பாதிக்கிறீர்கள்; சமயம் வந்தால் எல்லாம் அடித்துக்கொண்டு போய்விடும். நஷ்டமும் லாபமும் மாறி மாறிவரும். இரண்டும் உடன்பிறந்தாற் போன்றன. இன்றைக்குக் குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நாளைக்கு நடைமெலிந்து சோற்றுக்குத் திண்டாடி நிற்பதுண்டு. எங்களுக்கு அந்தப் பயமில்லை. நாங்கள் தனிகர்களல்லர் புஷ்டியானவர்களல்லர். ஆனால் ஒரேசீராக நெடுங்காலம் வாழ்பவர்கள்; எங்களுக்குப் பணம் குவியல்குவியலாகச் சேராது. இருந்தாலும், ஒருபோதும் சோற்றுக்குத் திண்டாட்டம் ஏற்படவு மாட்டாது." என்றாள்.

"ஆஹா! போதும் போதும்; உன் வாயை மூடு" என்று ஏசலானாள் தமக்கை. "உங்கள் வாழ்வைச் சொல்! உங்கள் வாழ்வும் நீங்களும் பன்றிக்குட்டி கன்றுகுட்டி போல்வீர்! உங்களுக்கு என்னதெரியும்? ஒரு ஒழுங்கு தெரியுமா? ஒரு நாகரிகம் தெரியுமா? உன்னுடைய புருஷனெவ்வளவு கஷ்டப்பட்டுஎன்ன! உள்ள நாட்களெல்லாம் பாடுபட்டு என்ன லாபம்? குப்பையிலே பிறந்து, குப்பையிலே கிடந்து அங்கேயே மடிவது தவிர்த்து வேறு என்ன காணப் போகிறீர்? நீங்கள் எப்படியோ அப்படியேதான் உங்கள் குழந்தைகளும்"

"வாஸ்தவந்தான். ஆனால் அதனால் என்ன கெட்டுப்போயிற்று? எங்கள் வேலை ரொம்ப கஷ்டமான வேலைதான். நாகரிக மில்லாததுதான். ஆனால் என்றைக்கும் சாசுவதமானது, நிச்சயமானது. ஒருவருக்குந் தலைகுனிய வேண்டியதில்லை. ஒருவரை யண்டி இச்சகம் பாடிநிற்க வேண்டியதில்லை. உங்கள் பட்டண வாஸத்தில் எல்லாம் ஆபத்துத்தான். இன்றைக்குக் கூடைப் பணமிருக்கலாம்: நாளைக்கே சனியன் பிடிக்கலாம். உன் புருஷனுக்குச் சீட்டு, குடி, கூத்தி முதலியன ஏற்பட்டு ஒரு நொடியில் பணமெல்லாம் போய்விடலாம். அடிக்கடி இந்தமாதிரி ஆபத்துக்களெல்லாம் ஏற்படுவதில்லையா?" என எதிர் உரைத்தாள் தங்கை

சமையற்கட்டுத் தாழ்வாரத்தில் படுத்துக்கொண்டிருந்த அவளுடைய புருஷன் பாஹோம் என்பவன் இந்த ஸம்பாஷணைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான்.

"என் மனைவி சொல்வது வாஸ்தவந்தான். குழந்தைப் பிராயம்முதல் சதா நிலத்தை உழுது பயிர் செய்து உழைத்து வருவதால் இந்தப் பட்டண வாஸத்தாரைப்போல் வீண் எண்ணங்கள் முதலியன எங்கள் மனதில் தோன்ற அவகாசமிருப்பதில்லை. எங்கள் கஷ்டமெல்லாம் எங்களுக்குப் போதுமான நிலங்களில்லை என்பது ஒன்றுதான். எனக்கு மாத்திரம் ஏராளமான பூமியிருந்தால் நான் டேவிலுக்கும் பயப்பட மாட்டேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.— (Devil என்பது மனிதர் மனதில் துர்எண்ணங்களைப் புகட்டும் பேய்)



அத்தருணம் சமைய லடுப்பண்டைப் பதுங்கியிருந்த 'டெவில்' இவ்வார்த்தைகளையெல்லாம் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்தது. தன் மனைவியின் வார்த்தைகளைக் கேட்டுக் குடியானவன் வீண் எண்ணங்கொண்டு, ஏராளமான பூமி யிருக்கும்பக்ஷத்தில் தான் "டெவிலுக்குக்" கூடப் பயப்படமாட்டான் என்ற, வீரமொழிகள் பேசியதைக் கேட்கக் 'டெவிலுக்கு' அதிக மகிழ்ச்சி யுண்டாயிற்று

"சரி, உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்விக்கிறேன். வேடிக்கையைப் பார். உனக்கு வேண்டிய பூமியைக் கொடுத்து அதன் மூலம் உன்னை என் வயமாக்கிக் கொள்ளுவேன். ஒருகை பார்ப்போம்" என்று தீர்மானித்தது 'டெவில்.'

**2**

அந்தக் கிராமத்துக்குப் பக்கத்தில் சுமார் 300 ஏகரா பூஸ்திதியுடைய ஒரு மாது வசித்திருந்தாள். குடியானவர்களிடம் அதிக அன்பு பாராட்டி அவர்களுடன் நிரம்பவும் அநுகூலமாய் வாழ்ந்துவந்த அந்த மாது திடீரெனத் தன் நிலங்களை மேல்பார்க்க ஒரு புதிய குமாஸ்தாவை நியமித்தனள். அவன் தண்ட வரிகள் வசூல் செய்பத்தொடங்கி ஜனங்களை நாலா விதத்திலும் ஹிம்ஸிக்கலானான். பாஹோம் என்ன ஜாக்ரதையாயிருந்தாலும் அடிக்கடி இவனுடைய குதிரையோ, பசுவோ, கன்றுக்குட்டிகளோ, அந்த மாதினுடைய வயல்களிலும் பயிர்களிலும் சென்று மேய்ந்துவிடும். ஒவ்வொரு தரமும் இவன் அபராதங் கொடுக்கவேண்டி வந்தது

பாஹோம் தண்டப்பணத்தை முணுமுணுத்துக் கொண்டே கட்டிவிட்டுக் கோபத்துடன் வீடு சென்று சதா தன் குடும்பத்தார்மீது எரிந்து விழலானான். இந்தப் புதிய குமாஸ்தாவினால் அந்தக் கோடைகால முழுவதும் பாஹோம் அதிக கஷ்டப்பட்டான். குளிர்காலம் வந்தது; கால்நடைகளைப் பட்டிகளிலும் கொட்டைகளிலும் அடைத்துவைக்குங் காலமது; குடியானவனுக்கு வைக்கோல் செலவு அதிகம். இருந்தாலும் ஒரு தொல்லை-அதாவது, புதிய கணக்குப்பிள்ளையின் அபராதத்தொல்லை—இல்லாமலிருக்குமேஎன்று ஸந்தோஷப்பட்டான்.

குளிர்காலம் ஆரம்பித்துச் சில நாட்களுக்கெல்லாம் அந்த மாது தன் நிலங்களை விற்றுவிடப்போவதாயும், சாலையில் சத்திரம் வைத்திருக்கும் வியாபாரி அதனை வாங்கப்போவதாயும் ஒரு வதந்தி உண்டாயிற்று. இந்தப் பேச்சைக்கேட்டுக் குடியானவர்களெல்லாம் அதிக பயமடைந்தார்கள்.

"சத்திரக்காரன் வாங்கினால், இந்தப் புதிய குமாஸ்தாவைவிடப் பத்துமடங்கு அதிகம் அபராதம் போடுவானே அந்தப் பாவி. அந்த நிலங்களை அண்டிப் பிழைப்பவர்களாவோமே நாம்" என்று வியாகுலப்பட்டார்கள்.

குடியானவர்களெல்லாம் கூட்டங்கூடி அந்த மாதினிடம் போய் "நிலத்தைச் சத்திரக்காரனுக்கு விற்றுவிட வேண்டாம். அவன் கொடுக்கச் சம்மதிக்கும் விலையைவிடச் சிறிது அதிகமாகவே நாங்கள் கொடுக்கிறோம்" என்று மனுசெய்து கொண்டார்கள். அந்த மாதும் அதற்கு இசைந்தாள். குடியானவர்கள் மறுபடியுங் கூட்டங்கூட்டிச் சந்தாபோட்டு நிலத்தைப் பொதுவில் வாங்கவேண்டுமென்று பேசினார்கள். இரண்டு முறைகள் கூட்டம் போட்டும் அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லை. நாம் முன்னர்க் கூறிய 'டெவில்' அவர்களுக்குள் வேறுபாட்டை உண்டாக்கிவிட்டது. பொதுவில் வாங்குவதென்பது இயலாத காரியம்; அவனவன் தன் சக்திக்குத் தக்கவாறு தனித்தனியாகப் பிரித்து வாங்கிக்கொள்வதாகத் தீர்மானித்தான். நிலத்துக்குச்சொந்தக்காரியும் முன்ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டதுபோலவே இதற்கும் ஒத்துக்கொண்டாள்.

தன் ஊர்க் குடியானவனொருவன் ஐம்பது ஏகரா வாங்கப்போவதாகவும், பாதிப்பணம் உடனே கொடுக்கும்படிக்கும் மீதிப் பாதி ஒருவருஷம் கழித்துக் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடாயிருக்கிறதென்றும் பாஹோம் கேள்விப்பட்டான். பாஹோமுக்குப் பொறாமையும் பேராசையு முண்டாயின

'எல்லாரும் வாங்கிக் கொள்கிறார்கள். ஏமாந்தால் நமக்கு ஒன்றுங் கிடைக்காமல் போய்விடும்' என்று யோசித்துப் பாஹோம் தன் மனைவியைக் கூப்பிட்டு "நம்மைத் தவிர்த்து எல்லோரும் நிலம் வாங்குகிறார்கள். நாமும் ஓர் இருபது ஏகரா வாங்குவோம். ஜீவனம் செய்வது மிகவும் கஷ்டமாய்விட்டது. அந்தப் புது கணக்கப்பிள்ளை அபராதம் அபராதமெனப் போட்டுக் கொல்கிறான்' எனக் கூறினான். இருவரும கலந்து யோசிக்க லானார்கள். கடைசியில் எப்படியாவது வாங்கிவிடுவதெனத் தீர்மானித்தார்கள். கையில் ரொக்கம் கொஞ்சந்தா னிருந்தது. ஓர் சேங்கன்றை விற்றார்கள், தங்களுக்குள்ள தேனீக்களில் பாதிமட்டும் விற்றார்கள். பிள்ளைகளிலொருவனை ஒருவருடம் ஆளாக அமர்த்தி முன்பணம் வாங்கினார்கள். கடைசியில் போதாதற்கு மைத்துனனொருவனிடமிருந்து கடன் வாங்கினார்கள். இவ்வாறுகத் திண்டாடிப் பாதிக் கிரயத்தொகை சேகரித்தானதும் பாஹோம், சிறிது காடும்செடியும் சேர்ந்திருந்த நாற்பது ஏகரா விஸ்தீரணமுள்ள பூமியைப் பேரம்பேசினான். சீக்கிரத்தில்நிச்சயிக்கப்பட்டு உடன்படிக்கையும் ஏற்பட்டுப் பாதிப்பணம் கொடுக்கப்பட்டது. மீதிப் பாதித்தொகை இரண்டுவருஷ காலத்தில் கொடுப்பதென்று பேசிப் பட்டணம்போய்ப் பத்திரமெழுதி முடித்தார்கள்.


### கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணாக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்.—SALEM.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 21. கடிமணப் படலம்.

மாறிய மனத்த ராஞேர் மாண்பிது காண்மி னம்மா.

திருமண வினைநாள்வந் தெய்தியுள தாதலின் உவகை மிகு மனத்தராய் யாவரும் ஒருவரையொருவர் பரிகசங்கள்புரிந்து நனி பாராட்டுமிவ் வுலகவியற்கைக்கு ஒப்பக் கம்பரும், பெரும்புகழ்ச் சனகனுல் பேணலுற்ற தயரதன்முதல் அவனுடன் போந் திருந்த அனைவரும் "உடம்பொடு துறக்க நகர் உற்றவரை யொத்தார்" என்றோர் இளநகை புரிதரு முகத்தோடிப் படலத்தை இனிதின் துவக்கலாகின்ற னர். உடம்பொடு துறக்கம் உற்றிடுமூக்கம் கொண் டான் இவர்குலத்து முன்னையோன் திரிசங்கு என்பா ன் வேந்தன். இவ்வூக்க மவனைக் கொண்டுய்த்த விடம் யாதென யாவரு மறிவார். அன்னவனைப் பேணிஞேன் கோசிகமுனிவன். மற்றத் திரிசங்குவிற்கு முற்றுருத வேட்கையை இன்று, அவன்மரபு வந்த தயரதனுதி யோர்பால் அக்கோசிகனே சனகனைக்கொண்டு முடி த்துவைத்தா னென்னலாம்படி கூறினர்போலு மித னைக் கம்பர்.

936 பக்கத் தொடர்ச்சி

துறக்கமே எய்திஞர்போல் நானுவித போகங்களை யிங்கிவர் துய்த்திருக்க, உறக்கமின்றி உழன்றனராய்க் கங்குற்போழ்தின் கரைகாணு ராயினர் இப்பக்க மிங்கு இராமன், அப்பக்க மங்குச் சீதை. வருபக லிரு வரு மொருவராகி மருவுற நிற்கின்ற நிலையினராத லால் இடைகிடந்தகாலத்திற் காற்றுதவ ரினைந்தவா றெலாம், இதற்கிணை யிலக்கியத்தில் யாண்டுமில தென்னும்வகை இங்குக் கம்பர்பிரா னியம்புகின்றனர். குயிலெனுங் குரலினள் அமுதெனுங் குதலையால்,

உரவே துமிலா ருயிரீ துமெனுக்
கரவே புரிவா ருளரோ கதிரோன்
வரவே யெனையா ளுடையான் வருமே
இரவே கொடியாய் விடியா யெனுமால்.

["சிறிதும் வலியற்ற என்போன்றோர், எனது உயிரை அளிக்கவேண்டும்" என்று இரக்க, 'தருகின்றேன்' என்று வாக்களித்தும், கொடுக்காமலே இருந்துவிடுவார் இவ்வுல கில் யாவரும் இலர். சிறிதுநான் காலந்தாழ்த்த லாயினும் கொடுப்பது திண்ணம். நாளைக் கதிரவன் உதித்ததும் என்னை ஆளுடைய அச்செம்மல் வந்து என்னுயிரை அளித் தற்கிருக்க, அது செய்யவொட்டாமல் விலக்குகின்ற இராக்காலமே, நீ மிகவும் கொடியை, ஒருநாளும் விடிய மாட்டாய்" என்பாள்]

கன்னிமாடத்தினின்று கண்ணுற்ற வக்கணமே, சஞ்சலங் கலந்திருந்த தன்முன்'அஞ்சலஞ்சல்'என்று வந்தெய்தாத ஆண்மையை அயிர்த்தாளேனும், சற் றும் ஆற்றுத பெண்மையுடையளாந் தன்னை ஆட் கொண்டு அளிக்குங் கருத்தினனிக் கோமகன் என் பதை முன்னுள் மண்டபத்தில் 'கைவளை திருத்துபு கடைக்கணில் உணர்ந்துளாள்' சீதை. ஈவதற்கிருப் போனை இடைநின்று விலக்குகின்றதால் இவ்விராக் காலம் கொடியதென்று இங்கவள் வாயால் கடியப் பெற்றது. ஈவோர் ஏற்போர் ஆய இருதிறத்தாராலும், கொடுப்பது தடுப்போர் வசையுண்பர். கொடுக்க நின்ற மாவலி முன், சுக்கிரனைக் "கொடுப்பது விலக்கு கொடியோய்' எனவைது,"நினது சுற்றம் உடுப்பதுவு முண்பதுவுமின்றிக் கெடுகின்ருய்" எனச் சபித்தான். இங்கு ஏற்கநின்றசீதை, "இரவே,இயல்வதுகரவாராய இராமனது ஈகையைத் தடுக்கின்ருயாதலால்,நீ மிகவும் கொடியவன். நீ விடியவேமாட்டாய்" என்று வைகின் ருள். இனி, 'இரவே கொடியாய் விடியாய்' என்னுமவ் வாசகம் கங்குலை வைவதின்றித் தன்னையே நினைத்து அவள் நைகின்ருள் என்னும் பொருள் கொளற்குரிய தாகவும் நிற்கின்றது. "எனதுயிரைத் தருவேன் என்றுணர்த்தியுந் தருவதின்றிக் கரவே புரிபவரும் உளர் போலும். கதிரோன் வந்தும் அவர் வருவரோ யாதோ அறிகிலேன். இவ்வண்ணம் யான் இரந்து பின்னிற்கவேண்டியவோர் நிலைமை வந்தெய்தியதே. யாசகஞ் செய்வதனினும் இன்னுத தொன்றில்லை. ஏ, யாசகமே, என்னை யிந்நிலைக்குக் கொணர்ந்த நீ கொடியை. நீ ஒரு நாளும் நிறைய மாட்டாய்" என் ருள் என்பதும் ஒக்கும்.

இவ்வாறு இரந்து பின்சென்ற தன் மனத்தை நோக்கி,

கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ

[கருநிறமுடைமையோடு காந்தியும் பொருந்திய சூரியன் ஒன்று உளதாயின் அதுவேபோன்ற இராமனுடைய கால் களைத்தொடர்ந்து அன்று கன்னிமாடத்திலிருந்து கண்ட வுடன், என்மனமே, நீ போய்விட்டாய். நேற்று அவர் வந்தபோது அவருடன் வந்தாய். மறுபடி அவர் போன போது அவருடன் போயும்விட்டாய். இனி எத்தனையோ காலம் அவரைவிட்டு ஒருபோதும் பிரியாது திரிவதற் கிருக்க, இன்று ஒருநாளேனும் என்னேடு தங்கப் பொறுக்காமல் ஒழிந்துவிடுபவர், உன்னைப்போன்று வேறு யார் உளர்]

என்று இழித்துக் கூறுகின்றனள். இதற்கிடையில் அன்றிலோசை ஒன்றிரண் டவள்செவியி லோடுகின் றது. அதனைக் குறித்து,

கனையேழ் கடல்போல் கருநா ழிகைதான்
வினையேன் வினையால் விடியா விடினீ
தனியே பறவாய் தகவே துமிலாய்
பணைமே லுறைவாய் பழிபூ ணுதியோ

[ஒலிக்கின்ற ஏழு கடல்களைப்போல் அடர்ந்திருக்கின்ற இவ்விருட்காலந்தான், என்னுடைய தீவினையினுல் விடி யாமற் போனுல் போகின்றது. அதனைத்தான் ஆற்றியிருக்க நான் முயல்கின்ற இச்சமயத்தில், தகவு சிறிதுமில்லாமல், ஏ பனைமாத்தில் தங்கியிருக்கும் அன்றிலே,நீயும் வன் என் பழிக்கு ஆளாகின்ருய்; இவ்விடம் விட்டுத் தனியாக வேறி டம் பறந்து போய்விடு]

என வேண்டினுள். அல்லாமலும், "ஏ பறவையே, நீயும்என்னைப்போல் தனியாய்ப் புலம்புகின்றனையோ. அவ்வாருயின் உன் துன்பக்கிளவியால் என் துன்ப மும் அதிகப்படுகின்றதென் றுணருந் தகவில்லையோ,



நினக்கு! நீ வருந்துவதுமல்லாமல் எனது பழியை யும் ஏன் பூணுகின்ருய்," என்று சீதை அன்றிலுக்கு இரங்கினு ளாவதுங்கூடும். அவ்வாறே,

அயில்வே லனல்கால் வனவா நிழலாய்
வெயிலே யெனநீ விரிவாய் நிலவே
செயிரே துமிலா ருடறேய் வுறுவார்
உயிர்கோ ளுறுவா ருளரோ வுரையாய்

[சந்திரனே, நீ கூர்மைபொருந்திய வேல்போன்ற கிரணங்களாய வெயிலாகவே விரிகின்ருய். குற்றம் ஒன் றும் செய்யாதிருக்கும்போதும் நாளுக்குநாள் உடல்தேய்ந்து போகின்ற இந்தக் கதி உனக்கு வந்து உற்றது. அப்படியி ருக்க, என் உயிரைக் கொள்கின்ற பாவமும் செய்தாயா னுல் உனக்கு இன்னும் என்ன நேருமோ]

எனச் சந்திரனது அறிவின்மையைக் குறித்து, அத னுல் அவனுக்கு விளையக்கூடிய கேட்டினை நினைத்தன ளாய்ப் பரிவுகொள்கின்ருள். தென்றல் வீசுகின்றது.

மன்றற் குளிர்வா சம்வயங் கனல்வாய்
மின்றெத் துநிலா நகைவீழ் மலயக்
குன்றிற் குலமா முழையிற் குடிவாழ்
தென்றற் புலியே யிரைதே டுதியோ

[வாசனையும் குளிர்ச்சியும் பொருந்தி விளங்குகின்ற தீப் போன்ற வாயையும், பிரகாசிக்கின்ற நிலவாகிய பற்களையும் உடையதாய், எல்லாரும் விரும்புகின்ற மலய மலையின் சிறந்த குகையில் குடிவாழ்கின்ற தென்றல் என்னும் புலியே, நீ இரைதேடி இத்தூரம் வந்தாயோ]

எனப் "புலியேனும் பாவம், அதற்கோர் இரை வேண்டு மன்றே! இத்தூரம் அது என்னை நாடி இரைகொள வரலாயிற்றே" என்று அதன்பொருட்டும் இரக்கமே பூண்டனள். இராமனது உருவெளி தோன்றுகின் றது.

தெருவே திரிவா ரொருசே வகனர்
இருபோ தும்விடா ரிதுவென் னைகொலாங்
கருமா முகில்போல் பவர்கன் னியர்பால்
வருவா ருளரோ குலமன் னவரே

[தெருவேசென்ற ஒருவீரர் என்னைக் கண்டதுமுதல் எப்பொழுதும் என்னை விடாமல் தொடர்ந்துகொண்டு இருக்கின்ருரே. இது வென்ன அழகாமோ! கரிய முகில் போன்ற இவர் இப்படிக் கன்னியர் இருக்குமிட நாடிவந்து திரிவாராகுல் அவரது குலமும் புகழுங் குறையாவோ!]

என்று அவ்வீரனது புகழிற்குப் பரிவு கூர்கின்றனள். கடலலை மோது மாரவாரமும் இவள் செவிக்கெட்டு கின்றது.

இடையே வளைசோ ரவெழுந் துவிழுந்
தடலேய் மதனன் சரமஞ் சினையோ
உடலோய் வுறநா ளுமுறங் கலையால்
கடலே யூரைநீ யுமொர்கன் னிகொலாம்.

[கடலே, வளைகள் சோர, எழுந்தும் விழுந்தும், வலிமை பொருந்திய மன்மதனது பாணங்களுக்கு அஞ்சி இவ்வாறு புரள்கின்ருயோ! உனது உடல் ஓய்வடையும்படி தூக்கமுந் துறந்திருக்கின்ருய் — ஆகையால் நீயும் என் நிலையில் இருக் கின்ற வோர் கன்னியே தானே! கூறுவாய்]

எனக் கடலொடு முறவுகொண்டும் பரிவு பாராட்ட லாயினுள். இவளை வருத்துவனவேனும், சந்திரன் தென்றல் முதலியன யாவும் பழிப்புண்பதனினும் பரிவிற்கே பாத்திரமாயின. மன்மதனையுங்கூட, "அடலேய் மதனன்" என வஞ்சனையிற் புகழ்ந்ததல் லாது ஒன்றும் நிந்தித்திலள். காதல்பெருகு முள் ளத்தவர் பிறரைப் பழிப்ப தருமையெனும் உண்மை யை உணர்ந்த கம்பர் ஏனைய புலவரைப்போல் வசை யுறு சொற்கள் சீதையைப் பேசவையார். முன் இரா மனைக் கண்ணுற்றநாள் கதித்தெழுந்த காமத்தால், வானத்தைக் கூற்றென்றும், அந்தியை அரவென்றும், இருளைக் காலன் நிறமென்றும் நொந்தவள், இன்று முதிர்ந்தகாதலில் அன்ன உருவகங்களோடு சிறிது பரிவும் சேர்த்துப் பேசியபெற்றியைக் கூர்ந்து நோக் குவார் காண்பர்.

சனகன்செய் தவத்தால் சீதையாய் வந்தவதரித்த திருமகளிங் கிவ்வாறு உரைசெய் தருகுமெல்லையில் இராமனுமங்கு ஆற்றுமொழிகள் அறைவானுப்,

முன்கண் டுமுடிப் பரும்வேட் கையினுல்
என்கண் டுணைகொண் டிதயத் தெழுதிப்
பின்கண் டுமொர்பெண் கரைகண் டிலெனுல்
மின்கண் டவரெங் கறிவார் வினையே

[முன் கன்னிமாடத்தில்கண்டபோது, அவளது அழகை எழுதி முடித்துக்கொள்ளும் ஆசையினுல், எனது இரண்டு கண்களையுமே தூரிகைகளாகக்கொண்டு எனது இதயம் என்னும் படாத்தில் எழுதிவைத்திருந்து, பிறகு ஓவியத் தின் அமைதியை ஒப்புநோக்குவதற்கு நேற்று மறுபடி அவளைக் கண்ணுற்றும், இவ்வொரு பெண்ணுருவத்தின் அழகினது கரையைக் காண இயலாதவனுயிருக்கின்றேன். மின்னலைப் பார்த்தவர் திகைத்திருப்பாரன்றி வேறெக் காரியம் செய்யவல்லார்]

எனத் தன் அவசமுற்ற நிலைக்குக் காரணாங்கூறுவான். காதலியின் கட்டழகைத் தன் இதயமீது கண்ணிணை கொண் டெழுதியமைத்த லென்னுமிக் கருத்துக் கம் பர்பால் கற்றிராக் காதலர்க்குத் தோன்றுமா றெவ் வாறு! தோன்றினுமதனை உரைக்கும்வகை யோராத தாலோ 'வேறெவரு முரைத்திலர்! பிரிந் துலர்ந்தவ ருயிர்சுடு விடமாய் மலர்ந்த நெடுநிலவை நோக்கி,

திருவே யனையாண் முகமே தெரியின்
கருவே கனியே விளைகா மவிதைக்
கெருவே மதியே யிதுவென் செய்தவா
ஒருவே னுெடுநீ யுறவா கலையே.

[சந்திரனே, திருமகள் அனைய சீதையின் முகத்திற்கு நீ ஒப்பாவது ஏது! நீயோ, நெருப்பின் கரு, அதன் கனி யும் நீயே. ஆனுலோ, விளைகின்ற காமவிதைக்கு எருவும் ஆகின்ருய். எனின், என்னை வருத்துவதாகிய இக்காரி யத்தை நீயேன் செய்கின்ருய் என் ஒருவனேடு நீ உற வாக மாட்டாயோ!]

என மொழியும் வேளையில் இருள்மிகச் சூழ்ந்தது போலும். அவ்விருளைக் குறித்து,

கழியா வுயிருந் தியகா ரிகைதன்
விழிபோ லவளர்ந் ததுவீ கிலதால்
அழிபோ ரிறைவன் படவஞ் சியவன்
பழிபோ லவளர்ந் ததுபா யிருளே.

[என்னுடைய உயிராகிய யாழினை, இசைக்கும் கழி போல,இசைத்து என்னுயிரிற்குக் காதலென்னும் காதமும் சுருதியும் தன் பார்வையாலே அளித்த அம்மாதின் விழி களைப்போலவும், தோல்வியுற்று அழிகின்ற யுத்தத்தில் சாவதற்கு அஞ்சிப் போர்முனை செல்லாத தலைவனது பழி யைப் போலவும், இந்தப் படர்கின்ற இருளானது குறையா மல் வளர்கின்றது]

என்று விருந்திலும் விருந்தாய மொழிகள் விளம்பு வான். காரிகையின்கண்ணை யாழின் கழியாகவும்,

காதலன் உயிரை அக்கழியால் பண்பெற்றிசைக்கும் யாழாகவும் காட்டிக் காதலின் இளர்ச்சியைச் செப்புமித்திறத்திற்கு இணை எந்நூலில் எப்பாடையில் உளதென் றுரைத்தலருமை. அவ்விதமே,

நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனை நீ யுமறந் தனையோ

[வனத்தில் உலவுகின்ற மான்போன்ற அம்மாதினோடு போன என்மனமே, என்னை நீ நினைப்பதே யில்லையோ! அல்லாக்கால் வழிதான் வெகுதூரமோ! மற்று, அவளது அழகில் நீ உன்னையே மறந்து விடைகேட்க வாயெழாததால் அவளிடம் விடைபெறாமல் இன்னும் தயங்குகின்றனையோ? அல்லது நீயுமே என்னை மறந்து விட்டனையோ] எனஇராமன் தன்நெஞ்சை முன்னிலைப்படுத்திப்பேசுமிச்சொற்களின்பொருளும் அமைப்பும்போல்கற்றோரி தயங்களிக்கச்செய்யும் பாசுரம் எங்குளது? "வினவாதவர்பால் விடைகொண்டிலையோ" என்பதற்கு, "வந்தவுன்னை ஏனென்றுங் கேளாமல் முகங்கொடுத்தலின்றி இருப்பாள்மாட்டு விடைபெற்றுக்கொண்டு வந்துவிடாமல் நீ எற்றுக்கங் கின்னுந் தயங்குகின்றனை" என்னும் பொருள் ஒருவாறு அமையுமெனினும், விருந்தினை வரவேற்கா ளவள் என்னுங்குறை காணுதலின், "விடைபெறுதுமீளல் மரபன்று எனநினைத்தும், மற்றவ்விடை கேட்டற்கியலாது அவள்பால் தம்பித்தும் நிற்கின்றது இம்மனம்" என ஊகித்தலே சிறைப்புடைத்து. தன்மனம் இராமன்பால் சென்று தங்கிவிட்டதென்பாள் சீதை; தன்மனம் சீதைபால் சென்று தங்கிவிட்டதென்பான் இராமன். மனமாருட்ட மென்பது உண்மையி வின்னதேயோ.

நாளைத் தன் நன்மனை யாவா ளாயினும் சீதையை இன்று 'வினவாதவள்பால்' என்றும், 'புனமானனையாள்' என்றும் ஒருமையி லுரைக்கும் நாப்பெறாத இராமன் பலர்பாலிலேயே பகர்கின்ற இது, இக்குலமகனது ஒழுக்கமிகு மேன்மையைக் குறிப்பதன்றியும் அத்திருமகள், ஒருங்கே "சமீபமுமாய்த் தூரமுமாய்"த் தன் தனிநிலைப் பெருமையைக் காத்துக்கொள்ளும் செவ்வி எத்துணைத்து என்பதைத் தெரிவிக்கும்.

மறுநாள் மங்கலநாண் முடிந்து இருவரும், உணர்வினுல் மாத்திரமன்றி விதிமுறை உரிமையாலும் ஒருவரொன் ருயபின் எந்நாளும் இராமன் சீதையை முன்னிலையிலும் படர்க்கையிலும் பன்மையில் பேசுநெறி பெற்றனன். இராமனிருக்க, இழிதகை மையலாலழிந்துழலும் இராவணனும், சூர்ப்பணகையின் மொழிகளது வேகத்தால் தன்முன் தோன்றிய சீதையின் உருவெளியை நோக்கி, முதலில்

விடநுங் கியகண் ணுடையாரிவர் மெல்ல மெல்ல
மடமங் கையரா யென்மனத்தவ ராயி னாரே

எனவே பலர்பாற் கிளவியில் மொழிவா னாயினன். இதனை இராவண னுரைத்தபோது அவளை யெய்துவானென்னும் நிச்சயம் அவனுக் கிருந்திராது. மற்று, பொய்முனிக் கோலங்கொண்டு மாயமான் சூழ்ச்சியாலவளைக் கவர்ந்தகல வந்தநாள், எய்தாமுன்னம் பெற்றனனென்றே பாவித்த இம்மதியிலி, சீதையை நோக்கி, "பெண்ணெனப் பிழைத்தாய்" என்றும், "செல்வத்துள் உறைதி" என்றும் ஒருமையில் உரையாடும் உரிமையைப் பாராட்டப் புக்கனன். மீண்டுமவள் சிறையிருந்த அசோகவனத்தில் வற்புறுத்தத் துணிந்த வாசகங்களும், "மறந்தரு செங்கணாய்" எனவும், "இடருழன் றுழ்தியோ" என்றும், ஒருமையி லமைந்துள. இணங்காளாயினும் தான் இன்னுமவளை வணங்கவைக்கலா மென்னும் எண்ணமவனுக் கிருந்தது. மற்று, தன் நெடுமுடி பத்தும், வீரமுங் களத்தே போட்டுத் தான் முதல்நாட்போர் முடிவில் வெறுங்கையோ டிலங்கை புக்கதுமல்லாமல், தனிப் பெருந் தம்பி கும்பகருணனும் மாண்டபின், தனது சிரங்களையும் சீதையின்பால் வைத்ததோர் மோகத்தையும் காத்தலினி யாவதில்லை என்றுணர்ந்த நெஞ்சினோடவளைக்கடைமுறை வேண்டச்சென்றானதலின், "அமுதின் வந்தீர்,"......"அமுதச் சொல்லீர்"...... "செந்திரு நீ ரல்லீரேல் அவளும்வந்து ஏவல் செய்யும்"......எனப் பன்மையில் மீண்டு முன்னிலைப்படுத்துவான். செந்திருவையே 'அவள்' எனக் குறிக்கத் துணிந்தவன் நா, சீதையை 'நீர்' என்றழைக்கவே இங்கு நேர்கின்றது. மனத்தின தியக்கத்திற்கேற்பப் பாத்திரங்களை இயம்பவைக்கு மிந்நாடக வுணர்ச்சியி லுயர்ந்தவர் கம்பர்.


நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.



கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர் ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஒவ்வொரு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன் அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,
321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.




# மலர்வனம்.

## காதன் மாதவி

தாக்கித் தாக்கித் தன்னுணர்வைத் தனதாக்கிக் கொண்டவோ ரணங்கைக் கானல்வாய் காண நேர்ந்ததாற் கோவலன், தான் அவசமுற்று நின்றதா யறைந்தானென்னுமப் படுபொருள் கண்ட காரிகைதானும், தன்னை நோக்கிநோக்கிச் சென்ற நம்பியின் நினைவைக்கூறி எதிர்வேலெறிந்தவாறு கண்டனம், நண்பர்காள், இப்பிரிப்பருங் காதலா ரன்பை வேறுபடப் பிரித்ததொரு பழியேபூண்ட பாடல்கள் பின்னுஞ்சில இந்நாள் காண்போம்.

876வது பக்கத் தொடர்ச்சி.

தமியளாக இடத்தெதிர்ப்பட்ட தலைவிக்குத் தலைமகன் நேரே கூறுவதுபோலவும், பாங்கற்குத் தலைவியிடங் கூறுவான்போன்றும் ஒருங்கே நிற்குமிந் நிலைவரி பாடினான் கோவலன்:—

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கணோர் வானத் தரவஞ்சி வாழ்வதுவே.

[இருகண்களென்னும் கயல்களை எழுதி, நெற்றியெனும் வில்லை எழுதி, கூந்தலெனும் மேகத்தை யெழுதி, மன்மதனது தொழிலாகிய காமம் ஊட்டும் விதங்களையும் எழுதிக் குறைவறத் தீர்ந்த இம்முகம் சந்திரன்தானோ பாருங்கள்! அச்சந்திரன்தானே, வானத்திலுள்ள இராகுவென்னும் பாம்பிற்குப் பயந்து, மீன்பிடிக்கும் படகால் தம் வாழ்நாள் கழிக்கும் வலைஞர் வசிக்கின்ற இந்தச் சிறிய ஊரில் வந்து ஒளிந்து உறைகின்றதோ, பாருங்கள்]

எறிவளைக ளார்ப்ப விருமருங்கு மோடுங்
கறைகெழுவேற் கண்ணோ கடுங்கூற்றங் காணீர்
கடுங்கூற்றங் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே

[தன் கையிலணிந்த ஒளிபொருந்திய வளையல்கள் ஒலித்தபோதிலும் அவ்வொலிக்கு அஞ்சி இருபக்கமும் ஓடி அலைகின்றனவாய், இரத்தம்படிந்த வேல்போன்ற கண்களையுடைய இவ்வுருவம் கொடிய யமனோ பாருங்கள். கொடிய யமன்தான், கடலால் வாழ்கின்ற வலைஞர் வசிக்கும் இச்சிறியவூரின்கண், இளமை பொருந்திய மெல்லியமேனியையுடைய வொருபெண்ணாய் வந்திருக்கின்றதோ, பாருங்கள்]

புலவுமீன் வெள்ளுணங்கற் புள்ளோப்பிக் கண்
கலவநோய் செய்யு மணங்கிதுவோ காணீ ரடார்க்
ரணங்கிதுவோ காணீ ரடம்பமர்தண் கானற்
பிணங்குநே ரைம்பாலோர் பெண்கொண் டதுவே.

[புலால் நாற்றமுடைய மீனினது வெண்மையான வற்றலைப் பறவைகள் கவராது ஓட்டிக்கொண்டே, பார்ப்பவர்க்குத் துன்பந்தரும் காமநோயுண்டாக்கும் இதுதானோ அணங்கு பாருங்கள். அணங்குதானோ, அடப்பங்கொடி படர்ந்த குளிர்ச்சிபொருந்திய இந்தக் கடற்கரையில், நெருங்கிய கூந்தலுடைய வோர் பெண்ணுக வந்துளது, பாருங்கள்]

இழுமென் னொலியா லமிழ்தென வழங்குமிப் பாடலைக் கடுவெனக் கேட்டனள் மாதவி. "என்னே, இம்மக னார்வம்; காமன் செயலெழுதித் தீர்ந்தமுகம் வேறொன்று கண்டான்கொல் இவன்! தானே இப் பாடலிற்குத் தலைவ னல்லானேல் இத்துணை ஊக்கம் எளிதிற் பிறக்குமோ! இவன் வாயன்று பாடுவது, இதயமே பாடிற்" றெனப்பேதுறலெய்தினளாயினுங் கள்ளந்துள்ளுங் கொடிய மனத்தால் இவைகளுக்கு ஒருவா றெதிர் உரையாய், தாயினதறிவுறுத்தித்தோழி அச்சத்தால் தலைமகனை வரைவுகொளத் தூண்டிய துறையிற் பின்வரும் பாசுரங்கள் மாதவி பாடினாள்.

நன்னித் திலத்தின் பூணணிந்து
நலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறுந்
திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்திண்
கொடியோ னெய்த புதுப்புண்கள்
என்னைக் காணு வகைமறைத்தா
லன்னை காணி னென்செய்கோ

[நல்ல முத்தாகிய ஆபரணங்களையும், பவளமாகிய ஆடையும் அணிந்து, அலைகளானவை, செந்நெல்விளையும் வயல்களிலெல்லாம் வந்து திரிகின்ற கடல்துறைத் தலைவனே, மீனக்கொடியுடைய மன்மதன் என் தலைவிமீது எய்து செய்தபுதுப்புண்களை நான் காணுதபடி புன்னைமரச் சோலைகள் தாது உதிர்த்து மறைத்தாலும், ஒரு வேளை தாய் பார்த்துவிடுவாளாயின், பிறகு யான் என்ன செய்வேன்—இக் களவுஒழுக்கத்திற்கும் நானும் உடன்பட்டு உதவினேனென்று என்னைக் கோவிப்பாளே]

வாரித் தரள நகைசெய்து
வண்செம் பவள வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றில்
திரையு லாவு கடற்சேர்ப்ப
மாரிப் பீரத் தலர்வண்ணம்
மடவாள் கொள்ளக் கடவுள்வரைந்
தாரிக் கொடுமை செய்தாரென்
றன்னை யறியி னென்செய்கோ

[கடல் முத்தாகிய புன்னகை புரிந்தும், வளப்பம் பொருந்திய சிவந்த பவளமாகிய ஆடையை உடுத்தும், வலையர் வாழ்கின்ற சேரியில், வலை உலரும் முற்றங்களில், அலைகள் வந்து உலவும் கடல்துறைத் தலைவனே! என் தலைவி, மாரிக்காலத்தில் பூக்கும் பீர்க்கமலரின் நிறமாகிய பசலை தோன்றும்படி கந்தருவமணஞ் செய்து இக்கொடுமையை இவளுக்குச் செய்தது யார் என்று அவள் தாய் தெரிந்து கொண்டால், யான் என்ன செய்வேன்].

புலவுற் றிரங்கி யதுநீங்கப்
பொழிற்றண் டலையிற் புகுந்துதிர்ந்த
கலவைச் செம்மன் மணங்கமழத்
திரையு லாவு கடற்சேர்ப்ப
பலவுற் றொருநோய் துணியாத
படர்நோய் மடவா டனியுழப்ப
வலவுற் றிரங்கி யறியாநோ
யன்னை யறியி லென்செய்கோ

[புலால் நாற்றம் படிந்திருப்பதற்காக மனம் வருந்தி, அது நீங்கும் பொருட்டுச் சோலைகளின் குளிர்ந்த இடங்களில் புகுந்து, அங்கு உதிர்ந்து கலந்திருக்கும் பழம் பூக்களின் மணம்பெறும்படி அலைகள் உலாவும் கடல்துறைத் தலைவனே! இன்னதென்று [illegible]ரைக்க இயலாத பலவித நோய்களைப்போல் தோன்றினும், உன்னை நினைத்துருகுகின்ற நினைப்பென்னும் நோயை என் தலைவி தனியே அனுபவிக்கின்றாளென்பதை எளிதில் அறிய இயலாதாயினும், அவள் தாயானவள் தெரிந்து கொண்டால் நான் என் செய்வேன்]

மாதவி புரியநினைந்த மாயத்தின்படி அவளை இப் பாட்டுடைத் தலைவியெனக் கொண்டு மாழ்கினான் கோவலன்.

## வர்த்தமானம்

சென்னைக் கிறிஸ்தியன் கல்லூரி:—சென்னைக் கிறிஸ்தியன்கல்லூரி சீக்கிரத்தில் தாம்பிரத்திற்கு மாற்றப்படுமென்றும், அங்குக்கட்டடங்கள் அமைக்க40லட்ச ரூபாய் ஆகுமென்றும், அமெரிக்காவிலிருந்து பொருளுதவி கல்லூரி அதிகாரிகளால் எதிர்பார்க்கப்படுகின்றதென்றும், அரசாங்கத்தார் இனாமாக நிலமும், 17லட்சம் ரூபாயும் கொடுத்துதவச் சம்மதித்திருக்கின்றனரென்றும் தெரிகின்றது.

***

கவர்னருக்கு உபசாரம்:—சென்னையின் புதியகவர்னரான ஸர் ஜியார்ஜ் பிரடரிக் ஸ்டான்லிக்கும் அவரது மனைவிக்கும் சென்றவாரம் கார்ப்பொரேஷனில் உபசாரம் நடந்தது. அப்பொழுது கவர்னர் பேசியதாவது:—

"இராஜபக்தியில் சிறந்த இம்மாகாணத்தின் கவர்னர் பதவியை நான் பெற்றதற்காக மிகவும் சந்தோஷமடைகின்றேன், இப்பதவியால் ஏற்பட்டுள்ள பொறுப்பை நான்சரிவரக் கையாளுவேன் மாகாணஜனங்களுக்கும்கவர்னருக்கும் இதுவரை இருந்தவந்தநெருங்கிய தொடர்பு என்காலத்திலும் நிலைத்திருக்குமாறு செய்வேன். சென்னைக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்வதற்கு என்னால் இயன்ற அளவு முயல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இம்மாகாணத்தில் அரசியல் விஷயமான பிரச்னைகள் மிகவும் சிக்கலாயிருக்கின்றதெனத் தெரிகின்றது. ஜாதி மதப் பிளவுகளும் கட்சிகளுமே இன்னதற்குக்காரணமென அறிகின்றேன். ஜனநன்மைக்கானவைசெய்ய எல்லோரும் ஏகோபித்து எனக்குக் கூட்டுறவுதந்து துணைபுரியுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்."

பிறகு கார்ப்பொரேஷன் தலைவரான ஸ்ரீமான் A. ராமஸ்வாமி முதலியார் கவுன்சில் அங்கத்தினர்களைக் கவர்னருக்கும் அவரது மனைவிக்கும் அறிமுகம் செய்வித்தார். பின்னர்க் கவர்னர் தம்பதிகள் பரிவாரங்களுடன் கவர்ன்மெண்டு விடுதிக்குச்சென்றனர்.

மத்திய மாகாண கவர்னர் நியமனம்:—மத்திய மாகாண கவர்னரான ஸர். மாண்டேகு பட்லர் இங்கிலாந்திற்குச் செல்லுவதால், அந்த ஸ்தானத்திற்கு ஸர் தாம்பே நியமனம் பெற்றுள்ளார். நவம்பர் மாதம் 30ந்தேதி சனிக்கிழமை பதவியை ஏற்றுக்கொண்டார். அதை உத்தேசித்து 17 குண்டுகள் போடப்பட்டனவாம்.

***

துருக்கி தேசத்தில் உத்தியோக சம்பந்தமாகவாவது சட்டசம்பந்தமாகவாவது உபயோகிக்க உத்தேசிக்கப்பட்ட நீதிவிசாரணை சம்பந்தமான எந்த தஸ்தாவேஜுகளையும், சென்னை ராஜதானி சம்பந்தப்பட்டமட்டில், உண்மையானவை யென்று உறுதிப்படுத்த, சென்னைப் போலீஸ் கம்மிஷனராகிய மிஸ்டர் எட்மண்ட் ஜேம்ஸ் ரௌலாண்ட்ஸன் என்பவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்று கவர்ன் மெண்ட் உத்தரவு பிறந்திருக்கிறது.

***

ஸநாதனதர்ம மஹாநாடு:—நவம்பர்மாதம் 30-ந் தேதி சென்னையில் ஒத்தவாடை நாடகக்கொட்டகையில் அகில இந்திய ஸநாதனதர்ம மஹாநாடு, ஸ்ரீ வலியாம் சுந்திர சக்ரவர்த்தி என்னும் வைதீக அறிஞர் தலைமையில் கூடிற்று. இம்மஹாநாட்டின் உபசரணைக் கமிட்டித்தலைவர் ஸ்ரீசங்கரநாராயண செட்டியார். வடநாடு ஆந்திரநாடு முதலிய விடங்களிலிருந்து மஹாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஸ்ரீ சகத்குரு பரமஹம்ஸ பிரிவ்ராஜகாசார்யா விருபாக்ஷமடம் ஸ்ரீ சங்கராச்சாரியார், ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யா அயோத்ய ராமானுஜ ஜீயர் முதலிய பெரியார் மஹாநாட்டிற்கு வந்திருந்தனர். ஸ்ரீ சங்கர நாராயண் செட்டியார் வரவேற்புப் பிரசங்கத்தில் புராதன சனாதன்தர்மம்செழிக்கவும்,சாரதாச்சட்டம்ஒழியவும் எல்லோரும் முயலவேண்டுமென்று வற்புறுத்தினர். பின்னர் அக்கிராசனர் சாரதாச்சட்டம் ஒழியவேண்டிய அவசியத்தை விரிவாக விளக்கினர்.


1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் **கலா நிலயம்** செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாயினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் | பையிண்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| | ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| செலவு உள்பட:— | காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைப்பாக்கம், சென்னை


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L (Editor)